# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி 23411 விலை: சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, கார்த்: 30; ஜுல்கஃ 30 (15-12-74) ஞாயிறு புத்தகம் 28 இதழ் 17


## கொழும்பில் தமிழரசு வெள்ளி விழா ஆரம்பம்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெள்ளி விழா நிகழ்ச்சிகள் கட்சி தொடங்கப்பட்ட நாளான 18-12-74 கொழும்பில் ஆரம்பமாகின்றன.

முதலாவது நிகழ்ச்சி கொழும்பிலும், அடுத்து 23 நிகழ்ச்சிகளும் தமிழ் ஈழத்தின் பல்வேறு தொகுதிகளிலும் நடைபெற்று இறுதி விழாவான 25வது நிகழ்ச்சி பெருவிழாவாக தமிழ் ஈழத் தலைநகரான திருக்கோணமலையில் நடைபெறவுள்ளது.

*18—12—74 கொழும்பு ராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறும் வெள்ளிவிழா நிகழ்ச்சிகளின் விபரம் வருமாறு:—*

*திகதி:— 18 — 12 — 1974 புதன்கிழமை மாலை 4 மணி.*

*தலைவர்:— தமிழரசுக் கட்சித் தலைவர் நாவலர் அ. அமிர்தலிங்கம்.*

**நிகழ்ச்சிகள்**

*1. கொடி வணக்கம்.*

—4-ம் பக்கம் பார்க்க

# சுதந்திரன்மீது விசேட கண்காணிப்பு!

## பத்திரிகைப் பேரவைக்கு அரசு உத்தரவு!

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரலாக வெளிவரும் சுதந்திரன் மீது விசேட கவனம் செலுத்துமாறும், அதில் வரும் செய்திகளை நுணுகி ஆராய்ந்து நடவடிக்கையெடுக்குமாறும் இலங்கைப் பத்திரிகைப்பேரவைக்கு அரசு விசேட உத்தரவு ஒன்றை சென்றவாரம் பிறப்பித்திருப்பதாகத்தெரியவருகிறது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக அரசு செய்துவரும் அநியாயங்களை சுதந்திரன் துணிச்சலுடன் அம்பலப்படுத்தி வருவதும், தமிழ் தேசிய இனத்தின் சட்டபூர்வமான உரிமைகளுக்காக வெகு உக்கிரமாக அது வாதாடி வருவதும் வாசகர்கள் அறிந்ததே. மற்ற பத்திரிகைகள் யாவும் அரசாங்கத்தினால் நசுக்கப்பட்டும், அரசுக்கு பயந்து அடங்கியொடுங்கியும் விட்டநிலையில்—சுதந்திரன் ஒன்றுமட்டுமேதமிழ்மக்களின் உணர்ச்சிகளை எடுத்துக் காட்டி வருகிறது. இப்போது அரசின் கழுகுக் கண் சுதந்திரன் மீதும் திரும்பியிருக்கிறது.

—4-ம் பக்கம் பார்க்க

## சண்முகதாசனுக்கு ஞானம் பிறக்கிறது!

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றத்தை நாம் கண்டிப்பாக எதிர்க்கிறோம்! தமிழ் மக்களின் பிரதேசம், சுதந்திரம் மொழி, ஆகியன பேணிக் காக்கப்பட வேண்டும்!" —சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் நா. சண்முகதாசன், (ஈழநாடு—4-12-74)

○ காங்கேசன்துறை இடைத்தேர்தல்

## சனவரி 7ல் நியமனப்பத்திரங்கள்

இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் மிகவும் ஆவலுடன் கடந்த 26 மாதங்களாக எதிர்பார்த்திருந்தகாங்கேசன்துறைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் 1975 சனவரி 7ம் திகதி யாழ் கச்சேரியில் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் முற்றாக நிராகரித்துள்ளார்கள் என்பதை சனநாயக ரீதியாக சிங்கள அரசுக்கும் வெளிநாடுகளுக்கும் எடுத்துக்காட்டுவதற்காக இந்த இடைத்தேர்தலை தமிழர் கூட்டணித்தலைவர் தந்தை செல்வா அவர்கள் ஏற்படுத்தியிருப்பது தெரிந்ததே. எனவே நடைபெறவுள்ள இவ்விடைத்தேர்தல் சாதாரண ஒரு இடைத்தேர்தலாக அமையாது — புதிய அரசியல் சட்டம் பற்றிய ஒரு வாக்கெடுப்பாக அமையவிருக்கிறது.

இடைத்தேர்தலில் புதிய அரசியல்சட்டத்தை எதிர்த்தும் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையை முன்வைத்தும் தந்தை செல்வா போட்டியிடவுள்ளார்.

அரசாங்க வேட்பாளர் புதிய அரசியல் சட்டத்தின் ஆதரவாளராக இருப்பார்.

1972ம் ஆண்டு அக்டோபர் 3ம் திகதி தந்தை செல்வா காங்கேசன்துறை

—4-ம் பக்கம் பார்க்க

● சென்னைச் சிறையில்

## ஜனார்த்தனம் உண்ணாவிரதம்!

இலங்கைத் தமிழர்களின் உரிமைக்கோரிக்கையை ஆதரித்து மனித உரிமை நாளான இம்மாதம் 10ம் திகதி உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்திருந்த உலகத்தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனம், சென்னைப்பொலிசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். டாக்டர் ஜனார்த்தனம் இப்போது சிறைச்சாலையிலேயே உண்ணாவிரதம் இருந்து வருகிறார்!

தமிழர் கூட்டணி சனவரித் திங்களில் தொடங்கவிருக்கும் சட்டமறுப்பு இயக்கத்தை ஆதரித்தும், இலங்கையில் தமிழர் உரிமைகள் மறுக்கப்படுவதை கண்டித்தும் மனித உரிமை நாளான 10-12-74ல் சென்னை மவுண்ட்ரோடிலுள்ள



தபால் நிலையத்துக்கு முன்னர் உண்ணாவிரதம்இருக்கப் போவதாக டாக்டர் இரா.

—4-ம் பக்கம் பார்க்க

## சுதந்திரனின் முதலாவது நூல்வெளியீடு

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களை நூலுருவில் வெளியிடுவதற்கு சுதந்திரன் நிறுவனம் இப்போது முன்வந்திருக்கிறது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்!

இந்நிறுவனத்தின் முதல் வெளியீடாக சுதந்திரன் ஆசிரியர் எழுதிய 'நெஞ்சம் நிறைந்த தம்பி' எனும் தியாகி சிவகுமாரனின் வாழ்க்கை வரலாறு நூலுருவில் வெளிவருகிறது.

இந்நூல் எதிர்வரும் 18-12-74ல் வெள்ளவத்தை இராமகிருஷ்ண

-4-ம் பக்கம் பார்க்க

## உடுப்பிட்டித் தொகுதியில் பாத யாத்திரை!

ஆட்சியாளரின் அக்கிரமங்கள் குறித்து ஆண்டவனிடம் முறையிடுவதற்காக உடுப்பிட்டித்தொகுதி தமிழர்கூட்டணியின் ஆதரவுடன் பொதுமக்களின் பாத யாத்திரையொன்று 22-12-74ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. இந்தப்பாதயாத்திரை வல்லிபுரக்கோவிலிலிருந்து தொடங்கி செல்வச்சந்நிதியை சென்றடையும்!

அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு, பஞ்சம், பசி, தவறான பொருளாதாரக் கொள்கை, கோன்முறைச் சீர்கேடு, அநீதி, மக்களின் கஷ்டங்கள் ஆகியன ஒழிந்திடவேண்டுமென்று தெய்வத்திடம் பிரார்த்திப்பதே இப்பாதயாத்திரையின் நோக்கமாகும் என்று உடுப்பிட்டித்தொகுதி பா. உ. திரு. க. ஜெயக்கொடி தெரிவித்தார்.

—4ம் பக்கம் பார்க்க

### வெள்ளி விழா சிறப்பிதழ்

அடுத்த
சுதந்திரன் இதழ்
தமிழரசு
வெள்ளி விழா
சிறப்பிதழாக
வெளிவரும்.

—ஆர்.

## 21 மாத சிறைவாழ்வுக்குப் பின் 3 தமிழ் இளைஞர்கள் விடுதலை!

இரண்டரையாண்டுகளாக காரணமின்றிச் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் அனைவரையும் அரசாங்கம் சென்றவாரம் விடுதலை செய்யப்போவதாக கொழும்பு முழுவதும் கதை பரவியிருந்தபோதிலும், பின்வரும் மூன்றே மூன்று இளைஞர்களை மட்டுமே 21 மாத சிறை வாழ்வுக்குப் பின்னர் அரசு விடுதலை செய்ய உத்தரவு இட்டுள்ளது.

*(1) திரு. சி. சந்திரகுமார் வயது 23. கைது செய்யப்பட்ட திகதி 9—3—1973. ஊர்: யாழ்ப்பாணம்.*

*(2) து. இராசலிங்கம் வயது 34. கைது செய்யப்பட்ட திகதி 9—3—1973. ஊர்: கொக்குவில்.*

*(3) ஆ. விவேகானந்தன் வயது 27. கைது செய்யப்பட்ட திகதி 5—4—1973. ஊர்: யாழ்ப்பாணம்.*

## தியாகராசா! எப்போது ராஜினாமா?

*தியாகராசா:—* நான் இன்னும் ஒருபடி மேலே போகிறேன். தமிழரசுக்கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் இன்னும் பலம் இருப்பதாக உடுவில் பிரதிநிதி கருதுவாரானால்!

*தர்மலிங்கம்:—* காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்துங்கள். நாங்கள் அதை நிரூபித்துக்காட்டுகிறோம்!

*தியாகராசா:—* நீங்கள் விரும்பினால் வட்டுக்கோட்டையில் நான் மீண்டும் போட்டியிடத் தயார்!

*தர்மலிங்கம்:—* அப்படியானால் முதலில்பதவியைவிட்டு விலகுங்கள்! நீங்கள் பிரதிநிதியாக இருந்துகொண்டே எப்படிபோட்டியிடமுடியும்?

*தியாகராசா:—* நான் பதவியை விட்டு விலகாமல் எப்படிபோட்டியிடமுடியும்? எனது சவாலை நீங்கள் ஏற்கிறீர்களா?

*தர்மலிங்கம்:—* நாம் ஏற்கிறோம்!

*தியாகராசா:—* நீங்கள் எனது சவாலை ஏற்றுக்கொண்டுள்ளபடியால் நான் ராஜினாமா செய்து மீண்டும் வட்டுக்கோட்டைத் தொகுதிக்குப் போட்டியிடத் தயார்!

—தேசிய பேரவை நிகழ்ச்சி (28—11—74.)

### சிங்களச் சிறையில் உணர்ச்சிக் கவிஞர் இன்றுடன் 919 நாள்!

## ஆபீஸ்பையன் சொல்கிறான்!

"உத்தியோகம் வேண்டுமா? காணி வேண்டுமா? கூட்டுறவுக்கடைகளில் வேலை வேண்டுமா? என்னிடம் வாருங்கள் என்று காங்கேசன்துறை இடைத்தேர்தலில் போட்டியிடப்போவதாக கூறப்படும் ஒருவர் கூறித்திரிகிறாராம்! ஆனால் அவரிடம் கொடுப்பதற்கு ஒன்று மட்டும்தான் இல்லை! அதுதான் தமிழ் மானம்! தன்மானம்! அது தந்தை செல்வாவிடம் மட்டுமே உண்டு என்பது காங்கேசன்துறை மக்களுக்கு நன்கு தெரியும்!"

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்புச் சட்டைகளின் 'சிங்கள சோசலிசம்' தமிழினத்தை அழித்தொழிக்கும் பாசிசம்!

"தொழிலாளர் நலன் கருதியே எமது சோசலிச அரசு நடைபோடுகிறது. போட்ட நடை போதுமென்று நினைக்கின்றவர்கள் அப்படியே நிற்கட்டும் நாம் தொடர்ந்து நடைபோடுவோம். எமது சோசலிச பாதையில் தங்கு மடங்கள் கிடையாது. தொழிலாளரின் முன்னேற்றத்திற்காக கடந்த நான்கு ஆண்டுகள் நாம் பெரும் சேவை செய்திருக்கிறோம். சோசலிசம் என்பது நின்று நின்று ஓடுவதல்ல. அடையவேண்டிய இடத்தை அடைந்தபின் தான் நிற்கவேண்டும். ஓடிய தூரம் போதுமென்று நினைத்தவர்கள் நிற்கட்டும். நாங்கள் ஓடிக்கொண்டேயிருப்போம். தொழிலாளர் முன்னேற்றத்திற்கான சோசலிசமே எமது சோசலிசம். பொலிசையும்ராணுவத்தையும் முன்னும் சந்தித்திருக்கிறோம். மீண்டும் சந்திக்கத் தயாராகவே இருக்கிறோம்."

பெரிய பரபரப்புடன் ஆரம்பமாகி, பரபரப்பில் முறியடிக்கப்பட்டு தொடர்ந்து பரபரப்பை ஏற்படுத்திவரும் இலங்கை சமசமாஜக் கட்சியின் 39 வது வருடாந்த தினத்தையொட்டி நடந்த மகாநாட்டில் சமசமாஜக் கட்சியின் தலைவரும் நாட்டின் நிதி மந்திரியுமான டாக்டர் என். எம். பெரேரா இவ்வாறு பேசினார்.

## 'சோசலிச' அரசியல் இதுதான்!

இந்த நாட்டின் சோசலிச அரசியல் பற்றி புரியாத மக்களுக்கு புரியவைக்க டாக்டர் என். எம். பெரேராவின் பேச்சை எமது கண்ணோட்டத்தில் இவ்வாறு விளக்கி எழுதவேண்டியிருக்கிறது.

"சிங்கள தொழிலாளர் நலன் கருதியே எமது சிங்கள சோசலிச அரசு நடைபோடுகிறது. சிங்களத் தொழிலாளரின் முன்னேற்றத்திற்காக கடந்த நான்கு ஆண்டுகள் நாம் பெரும் சேவை செய்திருக்கிறோம். சிங்கள சோசலிசமென்பது நின்று நின்று ஓடுவதல்ல. அடைய வேண்டிய இடத்தை (தமிழ் ஒழிப்பை) அடைந்த பின் தான் நிற்க வேண்டும். தமிழ் ஒழிப்பு செய்தது போதும் என்று நினைப்பவர்கள் நிற்கட்டும். நாங்கள் மிச்சம் மீதியுள்ள தமிழர்களையும் ஒழித்துக் கட்டிவிட்டுத்தான் நிற்போம். மலைநாடு முடிந்துவிட்டது. வடகிழக்கில் உள்ள தமிழர்களையும் முடிக்கவேண்டும். சிங்களத் தொழிலாளர்களின் முன்னேற்றத்துக்கான சிங்கள சோசலிசமே எமது சோசலிசம். பொலிசாரையும் இராணுவத்தையும் 8-1-66 லும் தமிழ் மொழி சட்ட விதிகள் டட்லி சேனநாயக்கா கொண்டு வந்த போதும் சந்திக்க தயாராக இருக்கிறோம். தமிழினத்தை நிர்மூலமாக்கும் எமது பாதையில் தங்கு மடங்கள் கிடையாது."

## மரண அடி

கடந்த நான்கு வருடங்களாக—டாக்டர் என். எம். பெரேராவும் அவரது சகாக்களான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, லெஸ்லி குணவர்தன, திருமதி விவியன் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, அனில் முனசிங்க நீல் டி அல்விஸ் போன்றவர்களும் பதவியில் அமர்ந்தபின்தான் 35 லட்சம் தமிழ் மக்கள் மீதும் மரண அடி ஒன்றின்பின் ஒன்றாக விழ ஆரம்பித்தன.

கள்ளிறக்கும் தொழில் இந்நாட்டின் எல்லாப் பாகங்களிலும் பெரும் முதலாளிகளிடம் ஏலத்தில் விடப்பட்டிருக்கையில், யாழ் மாவட்டத்தில் மட்டும் குடிசைக் கைத்தொழிலாக சிறுபான்மைத் தமிழ் சமூகத்தினரால் குடிசைக்குக் குடிசை நடந்து வந்தது. இந்தக் கள்ளிறக்குவோர் சமூகத்தின் வயிற்றிலே அடித்து அவர்களைத் தெருக்களில்பிச்சையெடுக்க வைத்தவர் நிதியமைச்சர் டாக்டர் என்.எம்.பெரேரா.

## தமிழன் உழைப்பில் சிங்களவனுக்கு வேலைவாய்ப்பு

மலைநாட்டுத் தமிழன் சேகரித்துக் கொடுக்கும் 88 சத விகிதம் அந்நிய செலாவணியை—வடகிழக்குத் தமிழ் மக்கள் நாட்டுக்குத் தேவையான மிளகாய், உருளைக் கிழங்கு, வெங்காயம், நெல் முதலியவற்றை உற்பத்தி செய்வதால் உபரியாக சேமிக்கப்படும் பெருந்தொகையான அந்நியசெலாவணியை—தென்னிலங்கையின் அபிவிருத்திக்கு முதலீடு செய்து சிங்கள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் சிங்கள இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கவும் டாக்டர் என். எம். பெரேராவின் வரவுசெலவுத் திட்டங்கள்தான் உதவி வந்தன; உதவிக்கொண்டும் இருக்கின்றன.

சாதாரண சட்டங்களாக இருந்த சிங்கள மொழிச்சட்டத்தையும், மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமைச் சட்டத்தையும் மூன்றில் இரண்டு பங்கு வாக்குப் பலத்தால் மட்டுமே மாற்றக் கூடிய அரசியல் மூலச்சட்டமாக மாற்றியமைத்து—சிறுபான்மையினருக்கு அநீதி விளைவிக்கும் வகையில் சட்டங்கள் அமையக்கூடாது என்றிருந்த 29வது சரத்தையும் அரசியல் மூலத்தில் இருந்து அகற்றினவைத்தவர் சமசமாஜக் கட்சியின் இன்னொரு பழம்பெருந்தலைவரான அரசியல் சட்டத்துறை அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வா.

யாழ்—கொழும்பு, மட்டுநகர் — கொழும்பு ரயில் சேவையைக் குறைத்து—கட்டணத்தை உயர்த்தி—சும்மா கிடந்த இ. போ. ச. வட்டத்துக்குள் தமிழுக்கு வாளையும் ஆங்கிலத்துக்கு வாலையும் காட்டுகின்ற சிங்கத்தை நுழைத்து, பஸ் பெயர்ப் பலகைகளில் சேருமிடங்கள் தமிழிலும் எழுதப்படுவதைஅகற்றி சோசலிசப் புரட்சி செய்த போக்குவரத்து மந்திரி லெஸ்லி குணவர்த்தன, சமசமாஜிக் கட்சியின் தலைமைப் பீடத்தை சேர்ந்தவர்.

## இ. போ. ச. வில் தனிச்சிங்களம்

35 லட்சம் ரூபா முதலீடு செய்து ஜெர்மனி நாட்டின் உதவியுடன் மொரட்டுவப் பகுதியில் ஆரம்பித்து இயங்கிவரும் மோட்டார் விஞ்ஞானப் பயிற்சிப் பாடசாலையில் சிங்களத்தைத் திணித்ததும்— தமிழ் மாணவரின் தொகையைக் குறைத்ததும் —இ. போ. ச. வின் தலைவராக இருக்கும் அனில் முனசிங்காவின் நிர்வாகத்தில்தான்! சமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவர் அவர்.

தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புக்காக தோட்டங்களில் கட்டப்பட்ட லயன்களில் சிங்கள மக்களை இரவோடிரவாக பலாத்காரமாகக் குடியேற வைத்துத் தமிழ்த் தொழிலாளர்களை மலையடிவாரங்களில் ஒழிந்து வாழ வைத்தவர்கள் ஆட்சியிலிருக்கும் இதே சமசமாஜிகள் தாம்!

தமிழ் அரசாங்க ஊழியர்கள் பதவியிறக்கம் செய்யப்பட்டதும், கல்தா கொடுக்கப்பட்டு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டதும், நீல். டி. அல்விஸ் எனும் சமசமாஜத் தலைவர் உதவி மந்திரியாக இருக்கும் பொது நிர்வாக அமைச்சினால்தான்.

இவர்கள் எல்லோரும் சேர்ந்து நடத்திய மாநாட்டில் தான்டாக்டர் என்.எம். பெரேரா "சோசலிசம்" பற்றிப் பேசியிருக்கிறார். இந்த மாநாட்டின் முன்னோடியாக சமசமாஜக் கட்சியினர். 'சோசலிசத்தை அடைவது எப்படி' என்ற தலைப்பில் எட்டு அம்சத் திட்டம் ஒன்றைத் தயாரித்து பண்டாவின் ஆட்சிக்கு அனுப்பி வைத்தார்கள் சமசமாஜிஸ்டுகள். இந்த எட்டு அம்சங்களிலே ஒரு அம்சம் கூட இந்நாட்டு சிறுபான்மை மக்களின் உரிமைகள் பற்றியோ — சோசலிசத்தை அடைவதற்கு சிறுபான்மை மக்களின் ஒத்துழைப்பும் அவசியம் என்பது பற்றியோ குறிப்பிடப்படவில்லை.

## தமிழர் வெளியேற்றம்

இது இவ்வாறிருக்க —சிங்கள சோசலிசம் தமிழ் தொழிலாளர் மீது நடாத்திக் கொண்டிருக்கும் மூர்க்கத்தனமான தாக்குதல்கள் கொல்வின் ஆர். டி. சில்வா அமைச்சராக இருக்கும் தோட்டத்துறை அமைச்சிலிருந்துதான் நடத்தப் பட்டுக்கொண்டிருக்கின்றன.

எந்தத்தொழிலாளியையும் கட்டாயப் படுத்தி வெளியேற்றக் கூடாது என காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் சாஸ்திரியுடன் எழுதிக்கொண்ட ஒப்பந்தத்தை முறியடிக்கும் வகையில்—மலையகத் தமிழ் மக்கள் மீது கொடுமைகள் மேல் கொடுமைகளாக சுமத்தி — 'இந்த நாட்டை விட்டு ஓடிவிடுவது நல்லது' என்று தோட்டத் தொழிலாளர்களை 'விரும்பி வெளியேற்றி' கொண்டிருப்பது, தோழர் கொல்வின் ஆர். டி. சில்வாவுடைய தோட்டத்துறை அமைச்சு.

1964ல் 14 தொழிலாளர்களும்—1965ம் ஆண்டிலே 512தொழிலாளர்களும்—1966ம் ஆண்டில் 1910 தொழிலாளர்களும்—1967ம் ஆண்டில் 2648 தொழிலாளர்களும் — 1968ல் 2123 தொழிலாளர்களும்—1969ம் ஆண்டில் 5284 தொழிலாளர்களுமே விரும்பி வெளியேறி தாய் நாட்டிற்கு சென்றிருக்கிறார்கள்.

தோழர். கொல்வின் ஆர். டி. சில்வா தோட்டத்துறை அமைச்சராக பதவியேற்ற பின்—'தொழிலாளர் நலன் கருதி' அவரது சோசலிச அரசு நடைபோட ஆரம்பித்த பின்—சிங்கள சோசலிசத்தின் தாக்குதலைச் சமாளிக்கமுடியாது தாய்நாட்டைநோக்கி ஓடிய தமிழ் தொழிலாளர்களின்தொகை இது:-

1970 — 8733தமிழர்கள்
1971 — 21867 தமிழர்கள்
1972 — 27575 தமிழர்கள்
1973 — 33172 தமிழர்கள்

1974— 80,000 எதிர்பார்க்கப்படுகிறது.

இதைவிடப் பெரிய தொகையானோர், தமிழர்கள் உணவின்றி, உழைப்பின்றி ஊதியமின்றி உருக்குலைந்து உலகைவிட்டே வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். தோட்டத் தமிழர்களிடையே இந்த நிலையை உருவாக்கி இனக்கொலைநடத்திவருவது டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் அமைச்சு.

## சூழ்ச்சிகள்

மலையகத்து மக்களை எந்தக் கோஷங்களை ஏற்கச் செய்ததன் மூலம் அவர்களை வேறு உலகத்துக்கு கூண்டோடு அனுப்பி வருகிறதோ இந்த சிங்கள ஏகாதிபத்தியம்—அந்தச் சுலோகங்களை வடகிழக்குத் தமிழர்களிடையே புகுத்தத் துடிக்கிறார் டாக்டர் என். எம். பெரேரா — அதே உலகத்துக்கு வடகிழக்குத் தமிழர்களையும் அழைத்துச் சென்றிட.

நாட்டின்பொருளாதாரம் சீரடையும் பொழுது தமிழ் மக்களின் உரிமைகள் தானுகவே வந்துசேரும்.

'இன ஒற்றுமையும் ஐக்கியமும் ஏற்பட்ட பின்னர் தமிழ் மக்கள் சுதந்திரம் அடைந்துவிடுவார்கள்.'

"மொழியுரிமை, இன உரிமை, மத உரிமை எல்லாம் முதலாளித்துவம் மறைகின்ற பொழுதுதான் உதயமாகும்."

டாக்டர் என். எம். பெரேரா உதிர்க்கும் இந்த தத்துவங்கள் எல்லாம் சிங்கள, ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகள் என்பதை நாட்டின் பொருளாதாரத்திற்கு 88சத விகிதம் அந்நியசெலாவணியை உழைத்துக்கொடுக்கும் மலையகத் தமிழர்களின் பரிதாப நிலை எடுத்துக்காட்டி நிற்கிறது.

எனவே டாக்டர் என். எம். பெரேராவும் அவரது ஏஜெண்டுகளும் வீசும் வலையிலிருந்து தப்பும் வகையில் தமிழ் மக்கள் தமது அரசியல் வாழ்வை வகுத்துக் கொள்ளவேண்டும்.

நம்பிப் பின் சென்றவர்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும், சிங்கள ஏகாதிபத்தியத்துக்கும் நரபலி கொடுத்தே இன்று அமைச்சர்களாகி சுகபோகங்களை அனுபவித்து வருபவர்கள், சமசமாஜிகளும் காங்கேசன் துறையில் கண்வைத்திருக்கும் கம்யூனிஸ்டுகளும்!

## கந்தசாமியை மறந்தவர்கள்

1947ம் ஆண்டிலே கந்தசாமியை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் துப்பாக்கிக்கு இரையாகப்போட்டுவிட்டு மதில்மேல் பாய்ந்து ஓடி ஒழிந்துகொண்டவர்கள் இன்று நாட்டில் அமைச்சர்களாகப் பவனி வந்து கந்தசாமியைப்பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பங்கப்படுத்தி வருகிறார்கள். கந்தசாமியின் சிலைகூட இவர்கள் ஆட்சியில்தான் அகற்றப்பட்டது.

"புரட்சி! புரட்சி! ஆயுதப் புரட்சி! பயங்கரப் புரட்சி!

பாராளுமன்ற முறையை ஒழிக்கும் புரட்சி!

முதலாளித்துவத்தைப் புதைக்கும் புரட்சி"

என்று கோஷங்களைக் கிளப்பி இந்நாட்டின் இளைஞர்களைத் தவறான பாதைகளில் உணர்ச்சியுடன் நடக்கச் செய்துவிட்டுப் பாராளுமன்ற முறையையும், முதலாளித்துவ வளர்ச்சியையும் ஏற்றுக்கொண்டு சொகுசாக வாழ்கிறார்கள், சமசமாஜிகளும் கம்யூனிஸ்டுகளும். இவர்களை நம்பிப் பின் சென்ற இளைஞர்களின் பிணங்கள்தான் 1971இல் களனி கங்கையில் மிதந்து வந்து இந்து சமுத்திரத்துடன் சங்கமமாயின.

எனவே எமக்கு வேண்டாம் இந்தப் போலிப் புரட்சிகள். நாம் சிந்தும் இரத்தம் போலிப் புரட்சிக்கும் சிங்கள சோசலிசத்துக்கும் பயன்படக் கூடாது.

நாம் செய்யும் புரட்சி, நாம் சிந்தும் இரத்தம், விழுந்துவிட்ட, விழப்போகும் எம்மவர்களின் பிணங்கள் ஈழத்தமிழினத்தின் விடுதலைக்கு மட்டுமே பயன்பட வேண்டும். ஈழத் தமிழ்

# சிங்கள இடதுசாரிகளே!
# தமிழ் ஈழத்திலிருந்து கட்டுங்கள் மூட்டையை!!

## திக்கற்ற அரியம்

நாட்டை மீட்டிடப் போகும் விடுதலைப் போரில் போராடுவதைவிட மேலான உயர்ந்த இலட்சியம் வேறு எதுவும் ஒரு தமிழனுக்கு இருந்திட முடியாது.

ஈழத்தமிழ்நாட்டை மீட்டிடும் பணியில் எமது உயிர்களைப் பலிகொடுப்பதைவிட மேலான தியாகம் எதுவும் ஒரு தமிழனால் செய்திட முடியாது. சமசமாஜிஸ்டுகள் கம்யூனிஸ்டுகளின் புரட்சிப் பாதையில் தங்குமடம் 1956ல் நிரந்தரமாகக்கிடைத்து விட்டது. எமது விடுதலைப் போராட்டப் பாதையில் தங்குமடம் சுதந்திர ஈழத்தில் தான் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்

அன்பு நண்பா,

* இன்றைய அரசாங்கத்தின் கடந்த 4½ வருட ஆட்சியில் அதன் சாதனைகள் மிகவும் வேதனை தரக்கூடியவை!

* அரசு மக்களுக்கு கொடுத்த பல்வேறு வாக்குறுதிகளும் காற்றில் பறக்கவிடப்பட்டுவிட்டன!

* வடக்கே வந்த அமைச்சர்கள் அனைவருக்கும் ஆடம்பர வரவேற்புக்கள் அளிக்கப்பட்டும்—அவர்கள் அங்கிருந்து திரும்பிவரும் வழியிலேயே தமிழ் மக்களுக்கு தாம் கொடுத்த பல்வேறு வாக்குறுதிகளையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டனர்!

* தமிழ் மட்டுமே தெரிந்த தமிழ் மகனுடன் தமிழிலேயே அரசாங்கம் தொடர்புகொள்ளவேண்டும்! ஆட்சிமொழியாகிய சிங்களத்தில் தமிழ் மட்டுமே தெரிந்த தமிழனுடன் அரசு தொடர்புகொள்வது அடிப்படை உரிமையை மீறுவதாகும்!

* வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக தமிழ் இருக்கவேண்டும்!

* தமிழ் சிற்றூழியர்களுக்கு சிங்கள மொழித் தகைமை கோருவதும், சிங்களம் தெரியாத தமிழ் ஊழியர்களை வயிற்றிலடித்து அவர்களை வேலையிலிருந்து நீக்குவதும் அநியாயம்!

* தரப்படுத்தல் திட்டம், அநீதியானது—அதைக் கைவிடவேண்டும்!

* யாழ் பல்கலைக் கழக வளாகத்தின் மனித பண்பாட்டியல் போதனாபீடத் தலைவராக கலாநிதி இந்திரபாலாவை நியமித்திருப்பது தவறானது!

மேற்கண்டவாறு ஆட்சியாளரிடம் காரசாரமாக இடித்துள்ள பா. உ. யார் என்பதை அறிந்திட மெத்த ஆவல் கொள்ளுகிறாய்—இல்லையா நண்பா! யார் இப்படிக் கூறியிருக்கிறார் என்பதை நான் கூறினால் ஆச்சரியத்தினால் மூர்ச்சித்து விழுந்து விடாதே! அரசுக்கு ஆலவட்டம் வீசிவருபவர்; அம்மையாரின் தாசானுதாசர்; புதிய அரசியல் திட்டத்தினால் தமிழனுக்கு 'வரப்பிரசாதம்' கிடைத்து விட்டதாக வாய் கூசாமல் கூறித் திரிந்தவர்; சிங்கள அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வரும்போதெல்லாம் ஓடோடிச் சென்று அவர்களுக்கு 'சேவகம்' செய்திடத்தவறாதவர்; சென்ற 1973ம் ஆண்டு மார்ச் திங்களில் யாழ்ப்பாணம் சென்றிருந்த டாக்டர் என். எம். பெரேரா தமிழர்களுக்கு பிரச்சினைகள் உண்டு; அவை தீர்க்கப்படத்தான் வேண்டும் என்று கூறியபோது, முந்திரிக்கொட்டைபோல முந்திக்கொண்டு தமிழர்களுக்கு எவ்வித பிரச்சினைகளுமே கிடையாது என்று மறுத்துக்கூறி சிங்கள ஏகாதிபத்தியத்தின் சிந்தையை மகிழ்வித்தவர்: 1956ம் ஆண்டு தனித் தமிழ் நாடு கோரியவர்; சாட்சாத் திருவாளர் ஆ. தியாகராசா அவர்களே தேசிய அரசுப் பேரவையில் மேற்கண்டவாறு கூறி இருக்கிறார்!

தியாகராசாவின் ஒப்பாரி மட்டுமல்ல—சிறையிருக்கும் நம்செந்தமிழ்ச் செல்வங்களின் பிரச்சினைபற்றி — அரசாங்கக்கட்சி ஏடான 'ஜனவேகம்' அண்மைக்காலமாக திடீரென்று நீலிக்கண்ணீர் வடித்திட ஆரம்பித்திருப்பதும் — புதிதாக நீலச்சட்டைபோட்டுக் கொண்டு பிழைப்பு நடத்திட அரசியலுக்கு வந்திட்ட சில குப்பை கூளங்கள் கூட தமிழ் இளைஞர்களின் பிரச்சினை பற்றி மாய்மாலக் கண்ணீர் வடித்து அறிக்கை விடுவதும் இதையே நமக்கு உணர்த்துகிறது! யார் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குமேலாக உரிமைகேட்ட நம்முடைய உடன்பிறப்புக்களை, சிறைக்கோட்டத்துக்குள் தள்ளி சித்திரவதைப்படுத்தி — அவர்களது வாழ்வை அழித்துவருகிறார்களோ — அந்தக் கொடுங்கோலர்களின் சேவடியை அர்ச்சித்துச் சிந்துபாடிடும் சிவப்பு நீலச்சட்டையினர் — நம் செந்தமிழ்க் காளைகளுக்காக இன்றைக்கு திடீரென முதலைக் கண்ணீர் வடித்திட ஆரம்பித்திருக்கின்றனர் என்றால் இதன் அடிப்படைக் காரணம் என்ன?

சிங்கள ஏகாதிபத்தியத்தினால் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் பிரச்சினை இன்று தமிழ் மக்களின் பொதுப் பிரச்சினை ஆக்கப்பட்டுவிட்டது; அகில உலகத்தையும் கவருகின்ற பிரச்சினை ஆக்கப்பட்டுவிட்டது! இந்த நிலையை ஏற்படுத்தியவர்கள் தமிழர் கூட்டணியும் சுதந்திரனும்தான் என்பதை தமிழ் மக்கள் அறிந்திடுவர்!

சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் பிரச்சினையைப்போலவே—தமிழர்களின் உரிமைப் பிரச்சினையும் தமிழர் கூட்டணியினால் இன்றைக்கு மக்கள் பிரச்சினையாக்கப்பட்டு, அவர்கள் மத்தியில் வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பொதுமக்களின் ஒன்றுபட்ட அபிப்பிராயம் இன்றைக்கு இந்தப் பிரச்சினைகள் மீதே திரும்பியிருக்கிறது! எனவேதான், தமிழர்களின் உரிமைப்பிரச்சினைபற்றி பேசாதயாரும் —சிந்திக்காத யாரும்—தமிழர் மத்தியில் தலைகாட்டிடமுடியாத நிலை இன்றுதோன்றிவிட்டது! இதன் எதிரொலிதான் தியாகராசாவின் கூக்குரல்!

இரண்டு எசமானர்களுக்கு ஒரே வேளையில் சேவை செய்ய முடியாதென்பதை இந்த எட்டப்பர்கள் உணரவேண்டும்! சிங்கள ஆட்சிக்கு விசுவாசமாக இருந்தால், தமிழர்களுக்கு விசுவாசமாக இருக்கமுடியாது—தமிழர்களுக்கு விசுவாசமாக இருந்தால், சிங்கள ஆட்சிக்கு விசுவாசமாக இருந்திடமுடியாது! தமிழ்த் துரோகிகள்—சிங்கள ஆட்சிக்கு உண்மையில் விசுவாசமாக இருந்துகொண்டு, தமிழ் மக்களுக்கும் தாங்கள் விசுவாசமாக இருப்பதாக இப்போது கபடநாடகம் ஆடப் புறப்பட்டிருக்கிறார்கள். இதில் தமிழினம் எச்சரிக்கையுடன் இருந்திடவேண்டும்!

நண்பா, புதிய அரசியல் திட்டத்தில் தமிழ் மக்களின் உரிமைகள் பொறிக்கப்படவேண்டுமென்று தமிழர் கூட்டணி கூறுவது நியாயமற்றதல்ல என்று சிங்கள அமைச்சரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா ஒப்புக்கொண்டிருக்கும் அதே நேரத்தில்—வட்டுக்கோட்டை எட்டப்பர் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

"புதிய அரசியல் திட்டத்தையும் இப்போதிருக்கும் எந்த ஒரு சட்டத்தையும் எந்த வகையிலும் பாதிக்காத முறையில் தமிழர் பிரச்சினைகளை நிர்வாக ரீதியில் தீர்கலாம்!" என்று கூறியிருக்கிறார் தியாகராசா—வீடுகொழுத்தும் இராசாவுக்கு நெருப்பெடுத்துக்கொடுக்கும் மந்திரிபோல்!

நீதியமைச்சர், அரை குறை மனத்துடனாவது அரசியலமைப்பில் தமிழர் உரிமைகள் பொறிக்கப்படவேண்டுமென்ற தமிழர் கூட்டணியின் கோரிக்கை நியாயமானது என்பதை முதல் தடவையாக ஏற்றுக்கொண்டிருக்கும் அதே நேரத்தில்—எட்டப்பர் தியாகரோ அரசியலமைப்பை திருத்தாமலேயே தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்று அமைச்சருக்கு எடுத்துக்கூறி, தாம் ஓர் உண்மையான அடிமை என்பதை நிரூபித்திருக்கிறார்!

இந்த எம். ஏ. படித்த மனிதருக்கு அவர் பேச்சிலிருந்தே ஒரு மேற்கோளை எடுத்துக்காட்டி — சட்டத்தை மாற்றாமல்—திருத்தாமல் எப்படி ஐயா தமிழர் உரிமைகளைப் பாதுகாப்பீர் என்று கேட்கவிரும்புகிறேன் நண்பா!

# இது மார்கழி மாதம்! - இது முன் பனிக்காலம்!!

இது மார்கழி மாதம் — இது முன் பனிக்காலம் என்று நீ பாடுவது எனக்குக் கேட்கிறது; — குறும்புக்காரனல்லவா நீ! காலம் என்னமோ பனிகாலமாக இருந்தாலும்—தியாகராசாவின் இந்த "ஒப்பாரியின்" பின்னாலுள்ள சிலபல விடயங்களை நாம் சிந்தித்தாகவேண்டும்!

ஆட்சியாளர் தமிழர்களுக்கு இழைத்துவரும் இன்னல்களையும் இடர்பாடுகளையும், செய்துவரும் கொடுமைகளையும் காட்டிவரும் பாரபட்சங்களையும் தொடர்ந்தும் யாராலும் எவ்விதத்திலும் மூடிமறைத்திட முடியாத அளவுக்கு இன்று அவை அம்பலத்துக்கு கொண்டு வரப்பட்டுவிட்டன! ஈழத்தில் தமிழினம், சிங்கள ஆட்சியால் இனக்கொலைக்கு உள்ளாக்கப்படுகிறது என்கிற உண்மை இன்று உலக அரங்கிற்கு தமிழர் கூட்டணியினால் கொண்டுவரப்பட்டுவிட்டது! தமிழன் ஒவ்வொருவனும் தனக்கிழைக்கப்பட்டுவரும் திட்டமிட்ட அநீதிகளைக்கண்டு இன்றைக்குக் குமுறிக்கொண்டிருக்கிறான்! தமிழர்கள் மத்தியில் தமிழ் ஈழ விடுதலை உணர்வு மெல்ல மெல்ல—ஆனால் உறுதியாக வலுவடைந்து வருகிறது!

இந்தநிலையில்—தமிழர்களின் உணர்ச்சிகளுக்கு எதிராக நீச்சல் அடிக்க தங்களால் இனியும் முடியாது—கண்துடைப்புக்காகவேனும், தமிழர் பிரச்சினைகளைப்பற்றி பேசாவிட்டால் தமிழர்கள் மத்தியில் இனித்தலை காட்டிடவே முடியாது என்பதை அரசாங்க அடிவருடிகள் கூட நன்கு உணர்ந்துவிட்டனர் என்பதையே தியாகராசாவின் ஒப்பாரி நமக்கு உணர்த்துகிறது!

தியாகராசா, அசிஸ் போன்ற ஆளுங்கட்சி எடுபிடிகள் தாங்களும் தமிழர் பிரச்சினைகள் பற்றி பேசுவது போல இவ்வாறு அடிக்கடி பாசாங்கு பண்ணினாலும்—இவ்வாறு பேசுகின்ற இந்த மனிதர்கள் எவ்வாறு நடந்து கொள்ளுகிறார்கள் என்பதையும் நாடு கவனித்து கொண்டுதான் வருகிறது!

அடித்து முழக்குகிறார்கள்; அடுக்குமா இச்செயல்? அநியாயம் இது என்கிறார்கள்; எல்லாம் பேசிமுடிந்ததும், அம்மையாரின் சேலைத்தலைப்பு இவர்கள் கண்களில் தெரிந்திடும்; அவர்போட்டிடும் எலும்புத்துண்டின் சுவை நாக்கில் ஜலம் ஊறவைத்திடும்; எல்லாவற்றையும் உடனே மறந்துவிடுவார்கள்! உடனடியாக தங்கள் பேச்சையே திசைமாற்றி தமிழர் கூட்டணியை தாக்கு தாக்கென்று தாக்கி தங்கள் பேச்சை முடித்துவிட்டு—அம்மையாரின் 'நல்லபிள்ளைகளாக' அமர்ந்து விடுவார்கள்! ஆளுங்கட்சியின் சார்பாக கைகளை உயர்த்திக் காட்டுவார்கள்!

அடியிலிருந்து நுனிவரை—தமிழர்களுக்கு விரோதமாகச் செயற்படும் சிங்கள ஆட்சிக்கு சேவகம் செய்துகொண்டு—தங்கள் எஜமானியம்மாவுக்கும் கோபம்வராமல்—அதே நேரத்தில் தமிழர் உரிமைகளுக்காகவும் தாங்கள் குரல்கொடுப்பவர்கள் போல இந்த எட்டப்பர்கள் இன்றைக்கு புதிய நாடகம் ஒன்றை ஆடத் தொடங்கியிருக்கிறார்கள்!

தமிழர்களுக்கு எதிராக என்னென்ன அநீதிகளை இந்த அரசு செய்துவருவதாக தியாகராசா சுட்டிக்காட்டுகிறாரோ அதே அநீதிகளை செய்துவருகின்ற சிங்கள ஆட்சியில் தாமும் ஒட்டிக்கொண்டிருந்து தமிழர்களுக்கு இவரும் அநீதி இழைத்துவருகிறார் என்பதை தமிழினம் மறந்துவிடமாட்டாது!

தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி வெட்டி வீழ்த்தப்படுகிறதென்றால்—தமிழ் மகனுக்கு தனிச் சிங்களத்தில் கடிதம் வருகிறதென்றால்—தமிழ் ஊழியர்கள் சிங்களம் படிக்காத காரணத்தினால் வேலையிழந்து நடுத்தெருவில் நிற்கின்றனர் என்றால்—அரசாங்கத்தை ஆதரிப்பதன் மூலம் இந்த அநியாயங்களுக்கு உடந்தையாக இருப்பவர்கள் தியாகராசாவும், அருளம்பலமும் எம். சி. சுப்பிரமணியமும், குமாரசூரியரும் ராஜன் செல்வநாயகமும் இறுதியாகச்சேர்ந்த தம்பிராசாவும் துரோகப்பரும், வி. பொன்னம்பலமும், ... என்பதை ... ... ... ...துவைத்துக் கொண்டு இருக்கின்றனர்!

"தமிழ் பகுதிகளிலே வேலைசெய்யும் காவலாளிகள், சமையல்காரர்கள் போன்றோருக்கு சிங்கள நிபந்தனைகள் விதிப்பது அநியாயமானதென்று கருதி, இதுபற்றி அமைச்சருக்கு எழுதினேன். அதற்கு அமைச்சர் பதில் எழுதினார். அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களம் தெரிந்திருக்க வேண்டும்; அவர்கள் சிங்களத்தகைமை காணத் தவறினால், அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று சட்டம் சொல்கிறது. இந்த நிலையில் இதற்கு மாற்று வழியொன்றுமே இல்லை என்று அமைச்சர் எழுதியிருந்தார்!"

இவ்வாறாகப் பிரலாபித்திருக்கும் தியாகராசாவிடம் கேட்கிறேன்—தமிழனின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிக்கவேண்டுமென்று கூறுகின்ற அச்சட்டத்தை மாற்றாமல் தமிழ் ஊழியர்களின் பிரச்சினையை எப்படித் தீர்க்கமுடியும்? அவர்களுக்கு சிங்கள நெருக்கடியிலிருந்து எவ்விதம் விடுதலை பெற்றுக்கொடுத்திட முடியும்!!

புதிய அரசியல் திட்டம்தான் தமிழர்களுடைய பிரச்சினைகளுக்கெல்லாம் மூலகாரணம்! அரசியல் சட்டரீதியாக தமிழர்களின் மொழி, இன பிரதேச, ஆட்சி உரிமைகள் வரையறுக்கப்படாதவரை —தமிழர்களின் பிரச்சினைகள் இந்நாட்டில் என்றுமே தீரப்போவதில்லை! அரசியல் சட்டத்தை திருத்தி தமிழர்களின் உரிமைகளை வழங்கிடவோ சிங்கள அரசு தயாராக இல்லை! இந்நிலையில் தமிழர்கள் தனியே பிரிந்து தனிநாட்டினராக—சுதந்திரமுள்ள மக்களாக வாழ்வது தவிர வேறு வழியே இல்லை! இதுவே இன்றுள்ள யதார்த்த நிலை!

இந்நிலையில்—தமிழ்ப்பாடசாலைகள் அனைத்துக்கும் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும் என்று பிரதமரிடம் கேட்டிருக்கிறார் வட்டுக்கோட்டை எட்டப்பர்! வட்டுக்கோட்டை எட்டப்பரின் பனிக்காலப் பேச்சினால் சிங்கள அரசுமோகம் போய்விடக் கூடாது.. பல்வேறு இனப்பாரபட்சங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு — உரிமை வேண்டிநிற்கும் தமிழ் மாணவர்கள் மத்தியில் சிங்கள ஆசிரியர்களை அரசு வலிந்து திணிக்குமானால் அது வேண்டாத—விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்திவிடும்! எரிகிற தீயில் எண்ணெய் வார்க்கும் அபாயவேலையில் அரசு ஈடுபடாதென்று நம்புகிறேன்!

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## பைக்குள் இருந்த பூனை வெளியே வந்தது!

இறுதியாக பைக்குள் இருந்த பூனையை அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா தேசிய அரசுப் பேரவையில் அவிழ்த்து விட்டுவிட்டார்!

தமிழினத்தின் உரிமைகளை அரசியல் சட்டத்தில் பொறிப்பதற்கு தாம் ஒப்புக்கொண்டாலும் சிங்கள மக்கள் அதை ஏற்கமாட்டார்கள் என்று அமைச்சர் பீலிக்ஸ் திட்டவட்டமாக திருவாய் மலர்ந்து இருக்கிறார்!

என்னதான் ஆட்சியாளர்களும், சிங்களத் தலைவர்களும் வடக்கே வந்து தேசியஒற்றுமைஇனிக்கஇனிக்கப்பற்றிபேசினாலும்—தென்னிலங்கையில் வகுப்புவாதம் துளிகூட இல்லாதொழிந்துவிட்டதாக பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் தமிழ் மக்கள் மத்தியில் அடித்துமுழக்கினாலும்—சிங்கள மக்கள் மத்தியில் தமிழினத்துக்கு எதிரான வகுப்புவாத உணர்வு சிறிது ஊதினாலும் சுவாலையாக பற்றிப்பிடிக்கும் அளவுக்கு இன்றைக்கும் நீறுபூத்த நெருப்பாகவே இருந்து கொண்டிருக்கிறது என்கிற உண்மையை ஒப்புக்கொண்டிருக்கும் அமைச்சரைப் பாராட்டுகிறோம்!

அமைச்சர் இந்த உண்மையை பகிரங்கமாக அறிவித்துள்ள காரணத்தினால் — போலித்தனமான தேசிய ஒற்றுமை ஒருமைப்பாட்டுக்கூக்குரல்களில் மயங்காது தமிழ் மக்கள் தாங்கள் சென்றடைய வேண்டிய இலட்சியம் எது —பாதை எது என்பதை தெளிவாகத்தெரிந்துகொண்டு அந்தப் பாதையில் தயக்கமின்றி நடைபோட முடியும்!

ஆனால் அமைச்சர்பீலிக்சிடம்நாம்கேட்கவிரும்புகிறோம்!

சிங்கள மக்கள் மத்தியில் வகுப்புவாத வெறியைத் தூண்டிய குற்றத்தை இழைத்தவர்கள் கே. எம். பி. இராசரத்தினாவும், ஆர். ஜி. சேனநாயகாவும்தான் என்று கூறியிருக்கிறீர்களே...! இது உண்மைதானா? இவர்கள் இருவரும் மட்டும்தானா இதற்கு பொறுப்பு?

தயவுசெய்து உங்கள் மனச்சாட்சியைத் தட்டிக்கேளுங்கள்! சிங்கள நாட்டு அரசியலைப் புரட்டிப் பாருங்கள்!

1956ம் ஆண்டு—தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து என்றிருந்த நிலையை மாற்றியமைத்து—சிங்களத்தை மட்டுமே நாட்டின் ஆட்சிமொழியாக்கவேண்டும் என்ற மொழிவெறி உணர்வையும் வகுப்புவாதத்தையும் சிங்கள மக்கள் மத்தியில் உண்டாக்கியவர்கள்யார்?

உங்கள் தலைவர் காலஞ்சென்ற பண்டாரநாயகாவும்—உங்கள் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் அல்லவா? இந்த 'சிங்களம் மட்டும்' என்கிற தமிழர்களுக்கு எதிரான விஷத்தைசிங்களமக்களுக்குப்பருக்கியவர்கள் இவர்கள் அல்லவா? இந்த 'மட்டும்' உணர்வுதானே இன்று வகுப்புவாத உணர்வின் மூலவேராக இருக்கிறது?

பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்து சிங்கள வகுப்புவாதத்தை பற்றியெரியச்செய்து —கண்டிக்கு யாத்திரை மேற்கொண்டு — அந்த ஒப்பந்தத்தை கிழிக்க காரணமாக இருந்தவர்கள் யார்? ஐக்கிய தேசியக் கட்சியினர் அல்லவா?

இதேபோல—1966ம் ஆண்டு சனவரி 8ம் நாள் தமிழ் மொழி சட்டவிதிகளை எதிர்த்து—தமிழ் விரோதத்தை கிளப்பிவிட்டு — தோசைவடை நல்லெண்ணய்கோஷம் எழுப்பி—ஒரு புத்த பிக்குவையும் பலிகொடுத்து சிங்களமக்களின் மனங்களில் வகுப்புவாதத்தை எண்ணெய் ஊற்றி பற்றவைத்தவர்கள் யார்?

இன்று ஆட்சியிலிருக்கும் ஐக்கிய முன்னணியான சிறீலங்கா சுதந்திர—சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சிகள் அல்லவா?

வரலாறு குறித்துவைத்துக்கொண்டிருக்கும் இந்த மறக்கமுடியாத உண்மைகளை யாராவது மறுக்கமுடியுமா?

இன்றைக்குக் கூட, வெள்ளைச்சாமிக்கும் கருப்பையாவுக்கும் காணிகொடுக்கமாட்டோம்; தொண்டமானை மலையகத்திலிருந்து ஒழித்துக் கட்டுவோம் என்றெல்லாம் முழக்கமிட்டு வகுப்புவாத நெருப்புக்கு நெய்யூற்றிவருபவர்கள் உங்கள்அரசாங்கத்தில் இருந்துகொண்டுதானே இருக்கிறார்கள்?

**சிங்கள வகுப்புவாதத்தை தூண்டிவளர்த்தவர் கே. எம். பி. இராசரத்தினாவும், ஆர். ஜி. சேனநாயகாவும்தான் என்று கூறி அமைச்சர் தப்பிவிடமுடியாது. வகுப்புவாதத்தின் முழுமுதற்சொந்தக் காரர்கள் ஐக்கியதேசிய கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளுமே! சிங்களம் மட்டும், சிங்களவர் மட்டும், பௌத்தம் மட்டும், என்பனபோன்ற 'மட்டும்' கோஷங்களும் கொள்கைகளுமே சிங்கள வகுப்புவாதத்தின் ஆணிவேராகும்!**

எனவே சிங்கள மக்கள் மத்தியில் இந்த இரண்டு கட்சிகளும் தூவிய விஷத்தை இந்த இரண்டு கட்சிகளுமே மீண்டும் உறிஞ்சியெடுக்க முயலவேண்டுமே தவிர, அதை தமிழரசுக் கட்சியோ. தமிழர் கூட்டணியோ செய்து விடமுடியாது! சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு எதிராக —அரசியல் இலாபம் கருதி—தாங்கள் உண்டாக்கிய வகுப்புவாத உணர்வுகளை அகற்ற ஆளும் கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் முன்வரவேண்டுமே தவிர—தமிழர் கூட்டணித் தலைவர்களை அத்தனகலைக்கு வா, தொம்பேக்கு வா, என்று அழைப்பதெல்லாம் வெறும் 'கலரிக்கு' விளையாட்டுக்காட்டும் செயல்களாக கருதமுடியுமே தவிர உருப்படியான நன்மை எதையும் உண்டாக்கமுடியாது!

தேசிய ஒற்றுமையிலும்—ஒருமைப் பாட்டிலும் இந்த இரு பெரும் சிங்களக் கட்சிகளுக்கும் உள்ளபடியே அர்வம் இருக்குமானால் தாங்களே உருவாக்கிய சிங்கள வகுப்புவாத பூதத்தைக் கொல்வதற்கு அவைகளே நடவடிக்கையெடுக்கட்டும்!

## 'தியாகராசாவைப் பற்றி பிரதமரின் கணிப்பு!

பிரதமர்:- "சோவியத் யூனியன், இந்தியா ஆகிய நாடுகளுக்கும் எமக்குமுள்ள உறவு நன்றாக இல்லையென்று ஏன்தான் இந்த உறுப்பினர் (திரு.ஆ.தியாகராசா) நினைக்கிறார் என்று எனக்கு விளங்கவில்லை. இந்த இரண்டு நாடுகளையும் பற்றி ஏன் அவர் குறிப்பிட்டுக் கூறவேண்டும் என்பதும் எனக்கு விளங்கவில்லை. அவர் சிறிது புரளியை கிளப்பிவிடவே முயற்சிக்கிறார் என்றே எண்ண வேண்டியுள்ளது!

வி. தர்மலிங்கம் பா. உ:- "இல்லை— அவர் இப்போது அண்மையில்தான், இலங்கை—சோவியத் நட்புறவுச் சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்!"

பிரதமர்:- "அப்படியானால்—தான் என்ன பேசுகிறோம் என்பதையே அவர் தெரியாதவராக இருக்கிறார்! பிழையான ஒரு மனிதர் அப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுவிட்டார்!"

—தேசிய பேரவை நிகழ்ச்சி (28-11-74)

### 'தரப்படுத்தல்...

—5-ம் பக்கத் தொடர்

அமைச்சர்அனுமதிப்பாரா அவ்வாறு அவர் அனுமதிப்பாராயிருந்தால் புள்ளிகள் மீது பூரண பரிசிலனையைச் செய்வதன் மூலம் தமிழ் மக்களின் அச்சத்தையும், சந்தேகத்தையும் நீக்கலாமே தவிர பத்திரிகை அறிக்கைகள் மூலமும், இதுபோன்ற வேறு அறிக்கைகள் மூலமும் தமிழ்ச் சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்டுள்ள பாரபட்சத்தை நீக்கிவிட இயலாது.

எமது கல்வி அமைச்சர் அவர்கள் ஐ. நாடுகள் சபைக்கு இலங்கையின் பிரதிநிதியாகச் சென்றிருந்தார். சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் பற்றி அமைச்சருக்கும் தெரிந்திருக்குமென எண்ணுகின்றேன். இப்பிரகடனத்தின் 26வது பிரிவானது "உயர் கல்வி வசதியானது திறமையடிப்படையில் சமமாக வழங்கப்படல்வேண் வேண்டும்" எனக் கூறுகின்றது

எனவே பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும்போது திறமையடிப்படையில் அனுமதிக்காமல் வேறு எவ்வடிப்படையைக் கைக்கொண்டாலும் அது இவ் 2 ஆம் பிரிவை மீறுவதாகவே அமையும். மனித உரிமைப் பிரகடனத்தை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் நாம் ஒரு உறுப்பினராக இருந்து கொண்டே அதன் பிரகடனத்தை மீறிச் செயற்படுவோமானால் அந் நிறுவனத்தில் அங்கத்துவம் வகிக்க எமக்கு என்ன தகுதியுண்டு?

—தொடரும்.

### உடுப்பிட்டித் தொகு...

—1-ம் பக்கத் தொடர்

பாதயாத்திரை வல்லிபுரக் கோவிலிலிருந்து ஆரம்பமாகி — உபய கதிர்காமம். புற்றளைப் பிள்ளையார், மந்திகை அம்மன், துன்னாலை முருகையன், இந்திர அம்மன் கோயிற்கடவை, கவிசை முருகன், நுணுவில் பிள்ளையார், அத்துளு அம்மன், கரவெட்டி தச்சன்தோப்பு, நெல்லியடி முருகையன், மூத்த நயினார், உடுப்பிட்டி முருகையன், வீரபத்திரர், கெருடாவில் கந்தசாமி கோவில்வழியாக செல்லச் சந்நிதியை வந்தடையும்.

இந்த வேண்டுதல் யாத்திரையில் ஆண், பெண், இளைஞர்கள் யாவரையும் பங்குபற்றுமாறு உடுப்பிட்டி தமிழரசுக்கட்சி கிளையும் உடுப்பிட்டி தமிழர்கூட்டணியும் கோரியிருக்கிறது.

### கொழும்பில்....

—1-ம் பக்கத் தொடர்

2. மங்கள இசை — குழலிசைமணி இராசமாணிக்கம் குழுவினர்.

3. தமிழர் நாட்டுப் பண்

4. வரவேற்புரை.

5. தலைவர் பேருரை.

6. தமிழர் விடுதலை இயக்கத்தின் வழிகாட்டி தந்தை செல்வா அவர்களுக்கு பாராட்டு வைபவம்.

(அ) பொன்னாடை போர்த்துதல்.

—திரு. மு. சிவசிதம்பரம் (தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர்.)

(ஆ) 'மூதறிஞர்' என்னும் சிறப்புப்பட்டம்வழங்குதல்.

—திரு. சௌ. தொண்டமான் (இ.தொ.கா. தலைவர்.)

(இ) வாழ்த்துப்பா

—யாக்கம் கவிஞர் சத்தி அ. பாலையா.

(ஈ) பதிலுரை:— தந்தை செல்வா.

### 7 சிறப்புச் சொற்பொழிவுகள்

திரு. எம். எஸ். செல்லச்சாமி (இ.தொ.கா. பொதுச் செயலாளர்.)

திரு. பா. நேமிநாதன் பா. உ. திருகோணமலை.

திரு. வ. ந. நவரத்தினம், பா. உ. சாவகச்சேரி.

திருமதி கலாசாம் தம்பிமுத்து.

திரு. ஐ. தி. சம்பந்தன், (துணைச் செயலாளர் தமிழ் தொழிற் சங்கக் கூட்டணி.)

திரு. செ. இராசதுரை, பா. உ. மட்டக்களப்பு.

திரு. அ. வரதராசன், (தமிழ் இளைஞர் பேரவை.)

திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்.

திரு. வீ. ஆனந்தசங்கரி, பா. உ. கிளிநொச்சி.

திரு. க. நடராசா (முன்னாள் மூதவை உறுப்பினர்.)

8. நன்றியுரை.

9. கலை நிகழ்ச்சி.

10. தமிழர் நாட்டுப் பண்.

### சுதந்திரன் மீது...

—1-ம் பக்கத் தொடர்

இலங்கைப் பத்திரிகைப் பேரவையில் சுதந்திரன் மீது இதுவரை எந்தவொரு வழக்கும் தாக்கலும் செய்யப்படவில்லையென்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

சில மாதங்களுக்கு முன்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வடபகுதி எடுபிடிகள் சுதந்திரனை தடைசெய்யவேண்டும் என்று தீர்மானம்நிறைவேற்றிஅரசாங்கத்துக்கு அனுப்பிவைத்ததும் இங்கு நினைவூட்டத் தக்கது.

எவ்வளவுதான் தொல்லைகள் சூழ்ந்தாலும், சுதந்திரன் தமிழ் பேசும் மக்களுக்கு தான் ஆற்றவேண்டிய கடமையிலிருந்து இம்மியும் தவறான் என்பதை மட்டும் வாசகர்களுக்கு உறுதியுடன் அறியத் தருகிறோம்!

### சுதந்திரன் புனித வணக்கம் செலுத்துகிறது!

மக்காவுக்கு புனித யாத்திரை புறப்பட்டு இலங்கையின் மஸ்கெலியா மலைச் சிகரத்தில் சிக்கி புனித மரணத்தை தழுவிக்கொண்ட இந்தோனேசிய நாட்டு இஸ்லாமிய ஹஜ் யாத்திரிகர்களுக்கு சுதந்திரன் சார்பில் நமது புனித வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்! இந்தப் புனித ஆத்மாக்களின் சாந்திக்கு இயற்கையை வேண்டி நிற்கிறோம்.

தங்கள் உறவினரை இழந்து வருந்தும் இந்தோனேசிய மக்களுக்கும், இந்தோனேசிய ஜனாதிபதிக்கும் நமது ஆழ்ந்த ஆனுதாபங்களை காணிக்கையாக்குகிறோம்!

—ஆசிரியர்.

### சுதந்திரனின்...

— 1-ம் பக்கத் தொடர்

மண்டபத்தில் நடைபெறும் தமிழரசுக் கட்சியின்வெள்ளிவிழா முதல் கூட்டத்தில் கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்களினால் வெளியிட்டு வைக்கப்படும். இந்நூலின் முதற்பிரதி சிவகுமாரனின் தாயார் திருமதி அன்னலட்சுமி அம்மையாருக்கு மேற்படி விழாவில் அன்பளிப்பாக வழங்கப்படும்.

இதே விழாவில் தமிழரசுக்கட்சித்தலைவர் நாவலரின் அரசியல் வாழ்க்கை வரலாற்று நூலான 'தமிழ் அமுதம்' எனும் நூலும் வெளியிடப்படவிருக்கிறது.

### சனார்த்தனம்...

—1-ம் பக்கத் தொடர்

சனார்த்தனம் அறிவித்திருந்தாரல்லவா? இதையடுத்து சென்னைப் பொலிசார் அவரை 6-12-74ல் முன் கூட்டியே கைதுசெய்தனர்.

டாக்டர் சனார்த்தனத்தை பொலிசார் எழும்பூர் 15வது மெட்ரோபாலிடன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். நீதிபதி அவரை இம்மாதம் 18ம் திகதிவரை காவலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

சிறையில் இருக்கும் டாக்டர் சனார்த்தனம் இப்போது அங்கும் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

### காங்கேசன்துறை....

—1-ம் பக்கத் தொடர்

உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். அதன் பின்னர் ஒரு தடவை நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கு அரசு நாள் குறித்துவிட்டு பின்னர் திடீரென அவசரகாலச் சட்டத்தின் கீழ் அதை இரத்துச் செய்ததும், அதைத்தொடர்ந்து கடந்த 20 மாதங்களாக தேர்தலை நடத்தாமல் போலிக் காரணங்களை கூறி இழுத்தடித்து வந்ததும் தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தரப்படுத்தல் தமிழ் மாணவர்களுக்கெதிரான ஒரு திட்டமிட்ட சூழ்ச்சி!'

"இவ்வாண்டு செப்டம்பர்மாதம் மூன்றும் வாரத்தில் பல்கலைக்கழக அனுமதிக்காய புள்ளிகள் தரப்படுத்தல் பற்றிய ஆவணமொன்று எங்களது மேசைகளில் வைக்கப்பட்டிருந்தது. இவ்வாவணமானது—தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படாததொன்ருக இருந்தமையில் இதன் மீது விவாதத்தை நடத்துவதற்கு எங்களால் இயலவில்லை. இவ் ஆவணம் எவராலும் கையொப்பமிடப்பட்டதாகவும் இருக்கவில்லை. இது தரப்படுத்தல் மீதான ஒரு வெள்ளையறிக்கையுமல்ல. பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் பற்றிய ஒரு காலங்கடந்த, பகுத்தறிவுக்கொவ்வாத ஒரு விளக்கத்தைத்தரவே இவ்வாவணம் முயல்கின்றது.

இதில் வெளியாகச் சொல்லப்பட்ட விஷயங்களை விட, சொல்லாமல் விடப்பட்டவையே அதிகம்.

இதில் தரப்பட்டுள்ள விளக்கமானது தரப்படுத்தலை ஒரு சூதுவாதான விடயமாகக் காட்டியுள்ளதே தவிர வேருென்றுமல்ல. இந்த ஆவணத்தில் கல்வி சார்பானதும், அரசியற் சார்பானதுமான கருத்துக்களைக் குழப்புவதற்குப் பாவிக்கப்பட்டுள்ள புதிர் மொழிகளும், மொழி ரீதியான தரப்படுத்தலை அறிமுகஞ் செய்வதற்குக் காட்டப்பட்டிருக்கும் நொண்டிச் சாட்டுக்களும் எதையும் விளக்குவதாகக் காணப்படவில்லை.

தரப்படுத்தலின் மீது அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், 1971-1972ஆம் ஆண்டுகளில் விஞ்ஞானத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர் தொகையும், இத் தரப்படுத்தல் முறையின் பின்னணியில் போதியளவு அரசியல் நோக்கம் இருந்துவருவதை எமக்கு எவ்வித சந்தேகமுமின்றிக் காட்டி நிற்கின்றது.

### தரப்படுத்தலின் பின்னணி

இந்த நாட்டிலே தரப்படுத்தல் முறையானது எவ்வாறு புகுத்தப்பட்டது என்ற வரலாற்றை நான் உங்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் நினைவூட்டினுல், தரப்படுத்தலின் பின்னணியில் மறைந்துள்ள விடயங்களை விளங்கிக்கொள்ள இலகுவாக இருக்குமென எண்ணுகின்றேன்.

1970ம் ஆண்டின் பொதுத் தேர்தலுக்கு முன்பு, அவ்வாண்டு பல்கலைக்கழகத்திற்குதெரிவு செய்யப்பட்ட மாணவர்கட்கு பல்கலைக்கழக அனுமதிக் கடிதம் தேசிய உயர் கல்விப் பேரவையினுல் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இத்தேசிய உயர் கல்விப் பேரவையே அன்று பல்கலைக்கழகத்திற்கு மாணவர் தெரிவிற்குப் பொறுப்பாயிருந்ததாகும்.

அதே ஆண்டு மேமாதம் மேன்மைதங்கிய பதியுதீன் மொகமட் அவர்கள் புதிய கல்வி அமைச்சராக நியமனம் பெற்ருர். இவர் பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் சிங்கள தருண சங்விதானய என்றசிங்கள இளைஞர் இயக்கமானது, அவ்வாண்டு பொறியியற் துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் பெரும்பாலோர் தமிழ் மாணவர்களெனவும், இதுபற்றி உடனடியாக அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவரை வேண்டிக் கொண்டார்கள்.

### விசாரணைக் குழு

பொறியியற்துறைக்கென ஒதுக்கப்படும் இடங்களில் பெரும் பகுதி தமிழ் மாணவர்களாலேயே போட்டிப் பரீட்சையில் வென்றெடுக்கப்படுவது இதுதான் முதற் தடவையல்ல. பல்கலைக்கழகத்தில் பொறியியற்துறையின் ஆரம்ப காலத்திலிருந்தே இது நடைபெற்றுவருவதொன்ருகும். ஆனல் பொறுப்புவாய்ந்த அமைச்சரும் இதுவிடயத்தில் தமிழ் மாணவர்கட்கு ஏதோ ஏறுமாருன சலுகை காட்டப்பட்டுள்ளதாகவும் இதன் மூலமே தமிழர்கள் வருடா வருடம் பொறியியற்துறையில் அதிக இடத்தை வென்றெடுக்கின்ருர்களெனவும் நம்பினுர்.

"இந்த ஊகத்தின் அடிப்படையில், பொறியியற் துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மாணவர்களின் விடைத்தாள்களைப் பரிசோதனை செய்தனர். ஏதேனும் மோசடியான நடவடிக்கைகளிலீடுபட்டு, வேண்டுமென்றே தமிழ் மாணவர்கட்குப் புள்ளிகளைக் கூட்டியுள்ளார்களா எனவிசாரணை செய்யும்படி கட்டளையிட்டு, அதற்காக ஒரு குழுவையும் நியமனஞ் செய்தார் அமைச்சர்.

ஒரு சாதாரண ஆள் அன்றி, அப்போதைய பல்கலைக்கழகத் துணைவேந்தர்—நேர்மையான ஒரு சிங்களப் பெருமகன் அக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். அமைச்சினுல் தமக்களிக்கப்பட்ட பொறுப்பை அவர்கள் செவ்வனே ஆராய்ந்து இது விடயத்தில் தமிழ் மாணவர்கள் மோசடி மூலம் எவ்விதமான புள்ளிகளையும் பெறவில்லையெனவும், பெற்றிருக்கும் புள்ளிகளைப் பெற அவர்கள் போதிய தகுதி உடையவர்களே எனவும் எடுத்துக்காட்டித் தனது அறிக்கையை அமைச்சருக்குச் சமர்ப்பித்தது.

### சிங்கள இளைஞர்களின் எச்சரிக்கை

ஆனல், அச்சிங்கள இளைஞர் இயக்கமானது இவ் அறிக்கையினுல் திருப்தி அடையவில்லை. தமிழ் மாணவர்கள் மோசடியாகக்கூடிய புள்ளிகளைப் பெற்றிருக்காவிட்டால், செய்கை முறைப் பரீட்சையின்போது பரீட்சாதிகாரிகள் தமிழ் மாணவர்கட்கு உதவிபுரிந்திருக்க வேண்டுமெனவும் கூறி அதை எமது அமைச்சரையும் நம்பவைத்தனர்.

வெளிப்படையான விசாரணைகள், புலனுய்வுகள் என்பனவற்றின் மூலம் எதையும் நிரூபிக்க இயலாதெனவும், உண்மையை மறைக்க இயலாதெனவும் உணர்ந்த இச்சிங்கள தருணசங் விதானய இயக்கமானது இவ் விடயத்தில் அமைச்சர் நேரடியாகத் தலையிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டது.

அமைச்சர் நேரடியாகத் தலையிடத்தவறும் பட்சத்தில் பல்கலைக்கழக வளாகங்களில் பலாத்காரம் பிரயோகிக்கப்படலாம் எனவும் எச்சரிக்கை செய்தது!

## ஆட்சியாளரின் போலி சோசலிசத்தை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தினர் —உடுவில் பா.உ.

> தமிழ் மாணவர்களின் உயர் கல்வியை தரைமட்டமாக்கி சிங்கள மாணவர்களுக்கு வசதிசெய்துகொடுக்கவே இந்த அரசாங்கம் தரப்படுத்தல் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை தேசிய அரசுப்பேரவையில் கல்வியமைச்சு மானியம் மீது பேசிய உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் புள்ளிவிபரங்களுடன் எடுத்துக்காட்டி ஆட்சியாளரின் போலி சோசலிச முகமூடியை கிழித்தெறிந்தார்.
>
> தரப்படுத்தல் திட்டம் கொண்டுவரப்பட்டதன் அடிப்படைக் காரணத்தை தம்முடைய உரையில் சாங்கோபாங்கமாக எடுத்து விளக்கிய உடுவில் பா.உ., தமிழ் மாணவர்கள் தமக்கிழைக்கப்பட்டிருக்கும் இந்த அநீதியை மறக்கவில்லையென்றும் அவர்கள் ஒருபோதுமே இதை மறக்கமாட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
>
> தரப்படுத்தல் என்றபெயரில் நடைபெற்றுவரும் இனப் பாரபட்சமே, தமிழ் இளைஞர் பேரவையின் தோற்றத்துக்கு காரணம் என்று தமது பேச்சில் குறிப்பிட்ட திரு. தர்மலிங்கம், ஐ. நா. சபையின் உறுப்பு நாடாக இருந்துகொண்டே, கல்வி விஷயத்தில் ஐ. நா. மனித உரிமை சாசனத்தை இலங்கை குழிதோண்டிப் புதைத்து வருகிறது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.
>
> 'தரப்படுத்தல்' சம்பந்தமாக திரு. தர்மலிங்கம் ஆற்றிய உரை முழுவதையும் இங்கே தந்திருக்கிருேம். —ஆசிரியர்.

இப்போதுதான் அமைச்சர் இதுவிடயத்தில் நேரடியாகத் தலையிட்டார். தேசிய உயர் கல்விச் சபையில் மாணவர்கட்கு வழங்கப்பட்டிருந்த பல்கலைக்கழக அனுமதிக் கடிதங்கள் அமைச்சரினுல் இரத்துச் செய்யப்பட்டன. அதன் பின்னர் எந்த ஒரு துறைக்கும் அனுமதி பெறத் தமிழ் மாணவர்கள் கூடிய புள்ளிகளையும், சிங்கள மாணவர்கள் குறைவானபுள்ளிகளையும், பெறவேண்டும். என்ற முறையையும் அமைச்சர் கண்டுபிடித்தார். குறிப்பிட்ட சில துறைகட்கு அனுமதி பெற வேண்டுமாயின் தமிழ் மாணவர்களும், சிங்கள மாணவர்களும் எத்தகைய வேறுபட்ட புள்ளிகளைப் பெறவேண்டுமென அமைச்சு விதித்தது என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | சிங்கள மாணவர் | | தமிழ் மாணவர் |
|---|---|---|---|
| மருத்துவம் | 229 | — | 250 |
| விவசாயம் | 176 | — | 184 |
| விலங்கு விஞ்ஞானம் | 181 | — | 206 |
| பொறியியல் (பேராதனை) | :27 | — | 250 |
| ,, (கட்டுப்பெத்தை) | 212 | — | 232 |
| பௌதிக விஞ்ஞானம் | 183 | — | 204 |
| உயிரியல் விஞ்ஞானம் | 175 | — | 184 |
| கட்டடக்கலை | 180 | — | 194 |

பொறியியற் துறைக்காய மாணவர் தெரிவு மிலேச்சத்தனமாக மீறப்பட்டதைப் பேராதனைப் பல்கலைக்கழகம் வன்மையாகக் கண்டித்தது. தனது ஆட்சேபனையைக் கடிதமூலம் அமைச்சருக்குத் தெரியப்படுத்தியது. ஆனல் அமைச்சர் இவற்றைப் பொருட்படுத்த மறுத்துவிட்டார்.

தமது கடிதத்திற்குரிய பதிலை அமைச்சரிடமிருந்து எதிர் பார்த்தும், அது [illegible] பொறியியற்றுறையினர், ஒரு மாதத்தின் பின்னர் பொறியியற்துறைக்காய விரிவுரைகளை ஆரம்பித்தனர். இந்த வகையிலேயே தரப்படுத்தல் முறையானது இலங்கையில் முதன் முதலிற் புகுத்தப்பட்டது.

இது தொடர்பாக அமைச்சர் பத்திரிகைகட்குப் பல அறிக்கைகளை வெளியிட்டார். ஒரு சோசலிச சமுதாயத்தில் வசதிகள் தொடர்ந்து ஒரே குழுவால் அனுபவிக்கப்படக்கூடாதென ஒரு அறிக்கையிலும், முஸ்லீம் மக்கள் மட்டுமேயன்றிச் சிங்கள மக்களும் இத் தரப்படுத்தல் முறையால் நன்மையடைந்துள்ளார்களெனஇன்னேர்அறிக்கையிலும் கூறப்பட்டுள்ளது. இது எமக்கு எதை விளக்குகின்றதென்றல், தமிழ் மாணவர்கள் எவ்வாறு திட்டமிடப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும், பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் அவர்களின் மீது எத்தகைய பாரபட்சம் காட்டப் படுகின்றதென்பதையுமே யாகும்.

1972ம் ஆண்டின் நடுப் பகுதியில் யாழ்ப்பாண பாடசாலைத் தலைவர்களைச் சந்தித்து இவர்கள் மத்தியில் அமைச்சர் உரையாற்றும்போது,—அரசியற் சூழ்நிலையை அனுசரித்தே இத்தரப்படுத்தல் முறையைக் கைக்கொள்ள நேர்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இது விடயத்தை மறந்துவிடும்படியும் அமைச்சர் பாடசாலைத் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்! இவர்கள் இதை மறந்துவிட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனல் ஒன்று மட்டும் எனக்கு நன்கு தெரியும். அது தான் தமிழ் மாணவர்கள் இவ்விடயத்தை மறக்கவில்லை என்பதும், அவர்கள் ஒருபோதும்இதைமறக்கமாட்டார்களென்பதுமாகும். இத்தரப்படுத்தல் முறையின் தாக்கமே 'தமிழ் இளைஞர் பேரவை' என்ற இயக்கத்தின் தோற்றத்தின் மூலகாரணியாகும்.

ஓழே தரப்படும் பல்கலைக்கழக அனுமதிபற்றிய சில புள்ளி விபரங்களை நாம் பார்க்கும்போது எந்த அடிப்படை நோக்குடன் இத்தரப்படுத்தல் முறை புகுத்தப்பட்டது என்பது எமக்கு நன்கு விளங்கும்.

1969ம் ஆண்டு பொறியியற் துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட சிங்களமாணவர் தொகை 51 7 வீதமாக இருந்து 197‍ல் 57.8 வீதமாக அதிகரித்து 1972ல் 66.7 வீதமாகவும் 19 3ல் 73.4 வீதமாகவும் 1974ல் 81.5 வீதமாகவும் அதிகரித்துச் சென்றுள்ளது. இதேபோன்றே மருத்துவத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட சிங்கள மாணவர் தொகையும் 1969ல் 50வீதமாக இருந்து 1974ல் 72.7 வீதமாக உயர்ந்துள்ளது.

இப்புள்ளி விபரங்களிலிருந்து நாம் வெளிப்படையாக அறியக் கூடிய தென்னவென்றல் — தரப்படுத்தல் முறையானது ஆரம்பிக்கப்பட்டதும், நடைமுறைப் படுத்தப்பட்டதும். பெரும்பான்மைச் சமூகத்தின் அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றி, அரசியல் செல்வாக்கைக் கூட்டிக்கொள்ளவே தவிர கல்வித் துறையை அனுசரித்து அல்ல என்பதேயாகும்.

இம் முறையானது ஓர் அநாகரிகமானதும், அருவருக்கத் தக்கதுமானதாகும் இந்தநாட்டிலே தமிழ்ச் சமுதாயத்தை, தொடர்ந்து பாரபட்சமாக நடாத்தப் புகுத்தப்பட்ட முறையே இதுவாகும்.

தரப்படுத்தல் முறையின் பின்னணியில் ஏதேனும் ஒழிப்புமறைப்பு அல்லது சூதுவாது இல்லாவிட்டால் தரப்படுத்தல் திட்டம் ஏன் ஒரு இரும்புத்திரை போட்டு மறைக்கப்பட்டுள்ளது? இன்றைய பல்கலைக்கழக மாணவர் தெரிவானது, அது தெரிவுசெய்யப்பட வேண்டிய பல்கலைக்கழக அலுவலகத்திலலாது—மலே வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியாலயத்திலேயே நடைபெறுகின்றது. இத்தெரிவானது போட்டிப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகள், தரங்கள் என்பனவற்றின் அடிப்படையில் நடைபெருது இன, மத அடிப்படையிலேயே நடைபெறுகின்றது.

இத்தரப்படுத்தல் முறையானது நன்னேக்குடன் புகுத்தப்பட்டதாயிருந்தால், நேர்மையாக நடைபெறுவதாயிருந்தால் — எவருக்கும் பாரபட்சம் காட்டப்படவில்லையென்ருல் —மறைப்பதற்கு எதுவுமே இல்லையானுல்— மாணவர்கள் உண்மையிலேயே பெற்ற புள்ளிகளையும், தரப்படுத்தலின் பின் பெற்ற புள்ளிகளையும் பரிசிலனை செய்து பார்க்கவென தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களை

—4-ம் பக்கம் பார்க்க

### தமிழர் கூட்டணி...

—6-ம் பக்கத் தொடர்

இவ்விதமான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைப் போட்டு வழி நடத்தினுல், தமிழ் மக்களின் பொருளாதார நிலை வளர்ச்சியடையும் அத்தோடு தமிழர் கூட்டணியும் விடுதலைப் போராட்டத்தைத் திறம்பட நடத்தும் வலிமையையடையும்.


## ஓர் நற்செய்தி!

சிக்கனச் செலவுக்கு மில்க்வைற் சவர்க்காரம்.

சிறியகட்டி 15 சதம் — பெரியகட்டி 30 சதம்

தரத்திலும் தயாரிப்பிலும் உயர்ந்தது மில்க்வைற்.

15 மில்க்வைற் நிலசோப் மேலுறைகளை அனுப்பி திருவெம்பாவை, — திருப்பள்ளியெழுச்சி, — திருப்பாவை, என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிற்சாலை

த. பெ. இல 7", யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணியினுல் அங்கீகரிக்கப்பட்ட 'குமரகுரு திட்டம்'!

## தமிழ் ஈழத்தின் பொருளாதார சுபீட்சத்துக்கு வழிவகுக்கும்!

தமிழ் ஈழத்தின் பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமாக தமிழர் கூட்டணியின் இணைப் பொருளாளரும் சட்டத்தரணியுமான திரு. அ. குமரகுரு அவர்கள் தயாரித்து முன்வைத்த திட்டமொன்றை தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு அங்கீகரித்துள்ளது.

திரு. குமரகுரு கூட்டணிக்கு சமர்ப்பித்து, கூட்டணியினுல்அங்கீகரிக்கப்பட்ட அத்திட்டம் வருமாறு:—

மொழி இன உரிமைகளை இழந்து, தவிக்கின்ற ஈழத் தமிழ் மக்களை, விடுதலைப் பாதையில் அழைத்துச் செல்லும் புனித இயக்கம் தமிழர் கூட்டணியேயாகும். பொருளாதாரப் பலமின்றி, எந்த ஒரு சிறுபான்மை இனமும் தமது விடுதலைப் போரில் வெற்றி கண்டதில்லை. இது வரலாறு காட்டும் உண்மையாகும். எனவே, தமிழ் மக்களின் இதய நாதமாக இயங்கி வரும் தமிழர் கூட்டணியும், தமிழ் பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தியிற் கவனஞ் செலுத்தி, வளஞ் செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

தமிழர் கூட்டணியின் இலட்சியம் விரைவிற் கைகூடவேண்டும் என்ற ஆவலினுலும், தமிழ் மக்கள் வலிமை பொருந்திய பொருளாதார சுபீட்சத்தை அடைந்து விடுதலைப்போருக்குத் தயாராகவேண்டும் என்ற எண்ணத்தினுலும், எனது பொருளாதாரத் திட்டத்தைத் தமிழர் கூட்டணியின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னர் வவுனியா ஆகிய இடங்களில் மாவட்டக் கிளைகளைத் தமிழர் கூட்டணி அமைத்திருக்கின்றது. கிராமங்கள் தோறும் கிளைகளமைத்துச் செயலாற்ருமையினுல், மாவட்டக் கிளைகளின் செயற்பாட்டிலும் மந்த நிலை காணப்படுகின்றது. இதனுல், தமிழர் கூட்டணியின் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்படுவதோடு, தமிழ் மக்களும் தமது உள்ளக் கிடக்கைகளை எடுத்துரைக்க முடியா நிலையயடைகின்றனர்.

எனவே:—

(1) தமிழர் கூட்டணியின் அமைப்புப் பரவலாக்கப்பட வேண்டும்.

(2) மேற்கூறிய மாவட்டங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு கிராமத்திலும், தமிழர் கூட்டணியின் கிளைகள் மைக்கப்பட்டு, அக்கிளைகள் செவ்வனே செயலாற்றும் நிலையை உருவாக்க வேண்டும். அத்தோடு இம்மாவட்டங்களிலிருந்து, குறைந்த பட்சமாக, மாதச் சந்தா ரூ. 2/- செலுத்தக்கூடிய 5000 உறுப்பினர்கள் சேர்க்கப்படவேண்டும்.

(1) யாழ்ப்பாண மாவட்டத்தில் 2000 பேரும்:

(2) மற்றைய ஒவ்வொரு மாவட்டத்திலும், 500 பேரும்; இவ்விதம் சந்தா செலுத்தும் உறுப்பினராகச் சேர்க்கப்படவேண்டும்.

### சந்தா செலுத்தும் உறுப்பினரைச் சேர்த்தல்

1. நடவடிக்கைக் குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் மாதச் சந்தா ரூ. 2- செலுத்தக்கூடிய 5 உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பர். இவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐவரும், ஆளுக்கு ஐந்து பேரைத்தேர்ந்தெடுப்பர்... இவ்விதம் உறுப்பினர்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான பணம் கிடைப்பதோடு, தமிழர் கூட்டணியின் வலிமையும் இதனுல் நாளுக்கு நாள் வளர்ந்து வரும்.

(2) சந்தா செலுத்தும் உறுப்பினர்களின் பெயர், முகவரி, முதலிய விபரங்கள், தலைமைசெயலகத்திலுள்ள பேரேட்டிற் பதிவு செய்யப்படும். அத்தோடு உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் பதிவு இலக்கமும் வழங்கப்படும்.

### சந்தா சேகரிப்போர் நியமனம்

1. மாதாமாதம் சந்தாப் பணத்தைச்சேகரிப்பதற்கென யாழ்ப்பாண மாவட்டத்தில் (3) மூவரும், மற்றைய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொருவர் நியமிக்கப்படுவர்.

2. நியமிக்கப்படுவோர் பிணைப்பணம் செலுத்த வேண்டும்.

3. இவர்களுக்கு மாதச் சம்பளமும், உழைப்புக்கான ஊக்க ஊதியமும் வழங்கப்படும்.

4. தமிழர் கூட்டணியின் சின்னமும், ஆண்டும் மாதமும் அச்சிடப்பட்ட, கிழித்துக்கொடுக்கக் கூடிய முறையிலுள்ள சிட்டைகள் இவர்களுக்குக் கொடுக்கப்படும். இவர்கள், நாள்தோறும் சந்தாசேகரிக்கும் தமது பணிமுடிந்த பின்னர் தாம் கிழித்துக்கொடுத்த சிட்டையின் பெறுமதியையும், மிகுதிச் சிட்டையையும், பணம் செலுத்திய சந்தாதாரரின் இலக்கங்களையும், செயலகத்தில் ஒப்படைக்கவேண்டும். இவ்விபரங்களனைத்தும் செயலகத்திலுள்ள பேரேட்டிற் பதியப்படும்.

இம் முறைப்படி மாதாந்தம் குறைந்த பட்சம் ரூபா பத்தாயிரமாவது சேர்க்கக்கூடியதாக இருக்கும்.

### பொருளாதாரப் பிரிவு

1. தமிழர் கூட்டணியின் "பொருளாதாரப் பகுதி" என ஒரு தாபனம் ஆரம்பிக்கப்படவேண்டும்.

2. இத்தாபனத்துக்கு ஒரு பொறுப்பதிகாரி, கணக்காளர், இரண்டு எழுதுவினைஞர்கள், இரண்டு சிற்றூழியர்கள் ஆகியோர் நியமிக்கப்படுவர்.



3. இவ்விதம் நியமிக்கப்பட்டவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படும்.

4. இத்தாபனத்தின் கணக்குவிபரங்களெல்லாம், பதிவு செய்யப்பட்ட கணக்குப் பரிசோதகர்களாலேயே பரிசீலனை செய்யப்படும்.

5. இத்தாபனத்தில், விவசாயப் பிரிவு, கைத்தொழிற் பிரிவு போன்றவை காலக்கிரமத்தில் அமைக்கப்பட்டு அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

சந்தாமூலம் சேர்க்கப்படும் பணம் மேற்படி தாபனத்தினுல், பின்வரும் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும்:-

1 மாதிரிப் பண்ணைகளை அமைத்து இளைஞர்களைக் குடியேற்றுதல். ஆரம்பத்தில் ஒவ்வொரு மாவட்டத்தில் ஒருமாதிரிப் பண்ணை அமைக்கப்படும். பின்னர், அவற்றின் வளர்ச்சியைப் பொறுத்து, மேலும் பண்ணைகள் அமைக்கப்படும்.

2 சிறுகைத்தொழில்களை ஆரம்பித்து, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்தல்.

3 தமிழர் கூட்டணியின் சார்பில் ஒரு வாராந்த ஏடு வெளியிடுதல் இவ்வேடு காலக்கிரமத்தில் நாளேடு ஆக்கப்படும்.

4 தமிழர் கூட்டணியின் கூட்டங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் அவ்வப்போது ஒரு கணிசமான தொகை ஒதுக்கப்படும்.

மாதிரிப் பண்ணைகளை அமைத்தல், சிறுகைத்தொழிற்பேட்டைகள் உருவாக்குதல் போன்ற பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான விடயங்களெல்லாம், அரசியல் நேரடிப் பங்கு கொள்ளாதசம்பளம்பெற்று ஊழியம் புரியும் அதிகாரிகளாலேயே கவனிக்கப்படும். இவ் அதிகாரிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டியதில்லை.

### பணம்

சந்தாமூலம் சேர்க்கப்படும் பணம் வங்கியிலேயே போடப்படும். இப்பணத்துக்குப் பொறுப்பாளர்களாக, அரசியலில் இல்லாத பிரமுகர்கள் நால்வரும், தமிழர் கூட்டணியின் பிரதிநிதிகள் அறுவருமாகப், பத்துப்பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படும். இந்தப் பணம் எந்தக் காரணம் கொண்டும், அரசியல் வாதிகளினுற் கையாளப் படக்கூடாது. அவர்களின் தேர்தற்செலவுகளுக்கு இப்பணம் கொடுக்கப்படமாட்டாது.

சந்தாமூலம் சேர்க்கப்படுகின்ற பணத்தைக் கொண்டு

—5-ம் பக்கம் பார்க்க




# பாரில் எழுந்த தமிழோசை

## சுவை நிறைந்த சுற்றுலா (IV)

"மங்கையர்க்கரசி
வளவர்கோன் பாவை'
வரிவளைக் கை மடமானி
பங்கையற் செல்வி
பாண்டிமாதேவி......"

ஓடிக்கொண்டிருந்த பேருந்துக் குள்ளிருந்து இனிமையான தமிழில் ஞானசம்பந்தரின் தேவாரம் ஒலிக்கிறது! ஆஹா, எவ்வளவு அருமையாக இருக்கிறது? எத்தகைய சுகானுபவத்தை அது தருகிறது?

யார் இவ்வளவு இனிமையாகப்பாடுகிருர்கள்? குரல் வந்த திசையில் பார்க்கிறேன்! சுவிட்சர்லாந்து அறிஞர் டாக்டர் கெல்லா தமது கண்களை மூடிக்கொண்டு தம்மை மறந்து பாடிக்கொண்டிருந்தார்.

வெளிநாட்டுக்காரர் ஒருவர் தம்முடைய தமிழில் இப்படி ஈடுபாடு கொண்டு அதன் இனிமையில் மூழ்குவார் என்று ஞானசம்பந்தர் கூட அன்று எதிர்பார்த்திருக்கமாட்டார்!

"மெத்த அருமையாக, உச்சரிப்புப் பிசகாமல், அழகாக பாடுகிறீர்களே!" என்றேன் நான் கெல்லரிடம்!

"ஆமாம் ஆமாம் — தமிழின் மீது எனக்கு அவ்வளவு ஈடுபாடு! இனத்தாலும், மதத்தாலும் வேறுபட்டாலும் மொழியால் நாம் ஒருவரே!" என்ருர் அவர்!

"நீங்கள் எவ்வாறு தமிழ் படித்தீர்கள்? தமிழின் மீது உங்களுக்கு எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது என்று கூறுவீர்களா?"

ஆம், ஆம் கூறுகிறேன்— நான் சுவிட்சர்லாந்திலுள்ள 'போசன்' என்ற ஊரில் பிறந்தேன். சுவிட்சர்லாந்தில் தமிழர்கள் இல்லை. ஆனுல் ஏராளமான தமிழ்ப் புத்தகங்கள் அங்கு இருக்கின்றன. நான் இந்தியாவிலுள்ள கேரளத்தில் ஆறு வருடங்கள் இருந்தேன். அப்போது மலையாளமொழியை படித்துக்கொண்டிருந்த நேரத்தில், தமிழையும் படிக்க வேண்டும் என்று ஆர்வம் ஏற்பட்டது. தமிழைப் படிக்கப் படிக்க—மேலும் அதில் எனக்கு ஆசை ஏற்பட்டது. இருபது வருடகாலம் தொடர்ந்து தமிழைப் படித்தேன்!"

"மிகவும் அழகாக தமிழ் பேசுகிறீர்களே?"

"ஆம் — தமிழிலே பேச வேண்டும் என்பது தான் எனது விருப்பம். ஆனுல்



டாக்டர் கெல்லர்

எங்கள் ஊரில் தமிழ் தெரிந்தவர்கள் இல்லாததால் தமிழில் பேசமுடியாமல் நான் தவிப்பதுண்டு. இங்கு தமிழர்களாகிய உங்களுடன் தமிழில் பேச கிடைத்த வாய்ப்பை பெரும் பேருக கருதுகிறேன்."

"தமிழ்மொழியில் எத்துறையில் உங்களுக்கு, ஈடுபாடு அதிகம்? எந்தெந்த நூல்களைப்படித்து இருக்கிறீர்கள் என்று கூறமுடியுமா?"

"தமிழ் இலக்கியம் எனக்குப் பிடிக்கும்! தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்துப் பிள்ளையார் பாடல்கள், திவ்விய பிரபந்தங்கள், போன்றவைகளைப் படித்திருக்கிறேன். திருமுருகாற்றுப் படையில் எனக்கு பிரியம் அதிகம். ...ழ மீது பக்தி கொண்டவன் நான்."

"தமிழில் எந்தச் சுவை உங்களைக் கவர்ந்திருக்கிறது?"

"பக்திச் சுவை! — தமிழில் உள்ள பக்திப்பாடல்களைப் போலஉள்ளத்தை உருக்கும் பாடல்கள்வேறுஎந்தமொழிகளிலுமேஇல்லை. இதில் குறிப்பிடத்தக்கது மணிவாசகரின் திருவாசகம். அது மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறது!"

'தமிழ் மொழியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்'?

'அது ஒரு மனேகரமான மொழி!"

"உங்கள் தமிழ் பக்தியும், தமிழில் நீங்கள் கொண்டுள்ள ஈடுபாடும் எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. இத்தகைய தமிழை ஈழத்தில் காப்பாற்ற ஈழத் தமிழ் மக்கள் நடத்திவரும் போராட்டங்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

"நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்கள் தலைவர் திரு. செல்வநாயகம் ஒரு பிரபலமான தலைவர். உங்கள் மொழிக்காக நீங்கள் நடத்துகின்ற போராட்டம் வெற்றிபெற என்னுடைய வாழ்த்துக்கள்!"

தன்னுடைய கல்லறையின் மீது ஒரு தமிழ் மாணவன் தூங்குவதாகப் பொறிக்கும்படி கூறிய ஜீ. யூ. போப் அவர்களின் பாரம்பரியத்தில் தமிழ்த்தொண்டாற்றி வரும் பேராசிரியர்கெல்லருடன் நான் உரையாடி முடிக்கும்போது திடீர் என்று கந்தரோடை வீதியில் பேருந்து நிற்கிறது!!

என்னவென்று அறியப் பார்க்கிறேன் — நாலைந்து கிராமவாசிகள். கையில் கத்திகளுடன் [illegible] குறுக்கே மறித்து நின்றனர்!

—வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறுகதை

# தமிழ் எங்கள் உயிர்!

தையிட்டி அ. இராசதுரை

"உல்லாசப் பிரயாணிகளாக அழகிய ஈழத்திற்கு விஜயம் செய்து...தமதும்... தமது குடும்பத்தினரதும் அதி கௌரவமிக்க விருந்தாளிகளாக...யாழ்ப்பாணத்திலுள்ள தமது பெரிய வீட்டில் தங்கிக்கொண்ட அமெரிக்க நாட்டவர்களான... ஜோன்சன் தம்பதியரைத் தமது பெரிய காரில் ஏற்றிக்கொண்டு யாழ்நகரின் வீதிகள் வழியாக சுற்றுலா வந்துகொண்டிருந்தார்...ஒரு அரசாங்க மேலதிகாரியான தணிகாசலம்.

"...என்ன அழகான யாழ்ப்பாணம்...என்ன இரம்மியமான யாழ்ப்பாணம்... இங்கே வந்து குடியேறிவிட வேண்டும்போல் எனக்கிருக்கின்றது..." ஓடிக்கொண்டிருந்த காரினுள் இருந்தபடியே இப்படியே... தம்மையே மறந்தவராக யாழ் நங்கையின் மீது கண்டதும் காதல் கொண்டு விட்டவரான ஜோன்சன்... சிறிதுநேர அமைதியான ஓட்டத்தின் பின்னர் எதையோ அதிமுக்கியமாகக் கேட்டறிந்துவிட வேண்டுமென்ற ஆவற்துடிப்பு முகம் முழுவதும் பிரதிபலிக்க... தணிகாசலத்தை நோக்குகின்றார். "...மிஸ்டர் தணி..." இந்த யாழ்ப்பாணம்... தமிழர்களுக்குத்தானே சொந்தமானது...?"

"...நோ... நோ... மிஸ்டர் ஜோன்சன்... இது... சிங்களவர்களுக்கும் சொந்தமானதுதான்...?"

"...?! ஓ... அப்படியானால் இங்கே... இருபாலாரும் ஒற்றுமையாகத்தான்... சமத்துவமாகததான்... வாழுகின்றார்களா...?"

"ஓ... யேஸ்... ஒரு தாயின் வயிற்றில் பிறந்த இணைபிரியாத இரட்டைப்பிறவிகளாகத்தான் வா..."

"எனக்கொரு சந்தேகம் மிஸ்டர் தணி...! நான் அடிக்கடி நியூஸ் பேப்பரில் படித்துள்ளதை இப்பொழுதுதான்... என்னுடைய ஞாபகத்திற்குக் கொண்டுவருகின்றேன்... அதாவது... இங்கே... நீங்களும் உங்கள் இனமும்... சகல அரசியல் உரிமைகளும் அற்றவர்களாய்... மொழி அடிப்படையிலும்... எவ்வளவோ... கீழே... கீழே தள்ளப்பட்டவர்களாக... ஆக்கப்பட்டுள்ளதாக"

"இதோ பாருங்கள் மிஸ்டர் ஜோன்சன்... தொழில் அடிப்படையில்... என்று நீங்கள் சொன்னதிற்கு... நான் ஒரு எக்ஸாம்பிளைச் சொல்லிக்காட்டவா...?இன்றைக்கு... நான் மாதம் இரண்டாயிரம் ரூபா சம்பாதிக்கிறேன்... எத்தனையோ சிங்களவர்களுக்கு நான் மேலதிகாரியாகக் கடமையாற்றுகின்றேன்... இப்படி என்னைப்போல் எத்தனையோ ஆயிரக்கணக்கான 'டமில்ஸ்' லட்சக்கணக்கான 'டமில்ஸ்' இருக்கவே இருக்கின்றார்கள் மொழிச் சுதந்திரமும் மத சுதந்திரமும்... இங்... இங்கே சிதைக்... சிதைக்கப்படவேயில்லை...?

"ஓ... அப்படியா மிஸ்டர் தணி... உங்கள்... ஜனநாயகத்திற்குத் தலை வணங்குகின்றேன்... மிஸ்டர் தணி... வெயிற்... வெயிற்...ஏ மினிற் ஹியர்... ஹியர்..."—தணிகாசலம் பதறியபடியே... காரைத் திடீரென நடுத் தெருவிலேயே நிறுத்துகின்றார்...

ஜோன்சன்... காரிற்குள் இருந்தபடியே...தெருவோரமாக உள்ள ஒரு வீட்டின் மதிலில் கொட்டை எழுத்துக்களில்எழுதப்பெற்றுள்ள ஆங்கிலச் சுலோகங்களைக் கவனமாகவும் அக்கறையாகவும்... படித்துப்பார்க்கின்றார். ..."அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட...ஒரு அடிமை இனத்தின் குமுறும் நெஞ்சங்களின் படுபங்கரமான பிரதிபலிப்புக்களையெல்லாம்... இந்த மதில் சுவரில் காணக்கூடியதாயிருக்கின்றதே... மிஸ்டர் தணி...??"

தணிகாசலத்திற்கு தமது உடையைத் திடீரென்று யாரோ... அப்படியே பிடுங்கிக் களைந்தெறிந்துவிட்டது போலாகவே... காரை வேகமாகஎடுக்கத்தொடங்கினர்.

"... மிஸ்ட்... மிஸ்டர் ஜோன்சன்... அ... அதெல்லாம் ஒரு பழைய கதை... அதெல்லாம்... ஆங்... ஆங்கிலேயர்... நம்மை... அடக்கி ஒடுக்கி ஆண்டுகொண்டிருந்த காலத்தில் எழுதப்பட்ட சுலோகங்கள்தானே... உங்கள் தவறான விளக்கத்தை மாற்றிக்கொள்ளுங்கள் ஜோன்சன்...??

..."ஓ...! அப்படியா...!! என்னுடைய தவறான விளக்கத்திற்காக... என்னை மன்னியுங்கள் கனவானே...மிஸ்டர் தணி...அதோ...?அதோ...?? ஒரு வாலிபன்... மேல்மாடியிலிருந்து குதித்துவிட்டானே... அந்தப்பக்கமாகக் காரை வேகமாக விடுங்கள் விடுங்கள்..."

தணிகாலசத்தின் கார் சில விநாடிகளில் அந்த நான்கு மாடிக்கட்டிடத்தின் காலடியில் வந்து நிற்கின்றது... "...யாரோ ஒரு வாலிபன் நான்காவது மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்டான் என்று" சொல்லிக்கொண்டபடி....... ஜோன்சன்... தணிகாசலத்தையும் இழுத்துக்கொண்டே— அந்த வாலிபன் விழுந்துகிடக்கும் இடத்திற்கே போய்விடுகின்றார்... சிதறுதேங்காயாக... இரத்த வெள்ளத்தில் அந்த வாலிபன் பயங்கரமாக இறந்து கிடந்தான்... அவனுக்குச் சில அடி தூரத்தில் ஒரு சுழல் துப்பாக்கியும் இருந்தது... இதையெல்லாம் பார்த்தபடி ஜோன்சன் அப்படியே இரும்புக் கம்பாக நின்றுகொண்டிருந்தார்...... தணிகாசலம் சூறவளிக் காற்றில் அடிபடும் ஒரு சோத்திமரமாக நின்றுகொண்டிருந்தார்.

அதற்கிடையில் அந்த வாலிபன் விழுந்த இடத்தைச் சுற்றி... ஒரு தேர்த் திருவிழாக் கூட்டமே கூடிவிட்டது... மூன்றாவது மாடியைநோக்கியும்...ஜனக் கூட்டம் கொந்தளிக்கும் சமுத்திரமாகிக்கொண்டிருந்தது... மேலே மூன்றாவது மாடியிலும் ஏதோ பயங்கரமான கேஸ் நடந்து முடிந்துதானிருக்கவேண்டுமென்று தமக்குள் நன்றாக ஊகப்படுத்திக்கொண்ட ஜோன்சன்... பக்கத்தில் நின்ற ஒருவரை... இலேசாகத் தட்டிப் பார்த்தார்.

..."இதொரு உணர்ச்சிமயமான கேஸ் சேர்..." என்று இழுத்துக்கொண்ட அந்தத் தமிழரை ஜோன்சன் நன்றாகக் கவனித்துப் பார்க்கின்றார்... அந்தத் தமிழருடைய கையிலுள்ள ஒவ்வோர் உரோமங்களும் வேற்படைகளாகக் குத்திட்டு நிற்க..., அவருடைய உணர்ச்சிக் கொந்தளிப்பான முகம்... ஏதோ...ஒருவீரக்கதையைப் படம்பிடித்துக் காட்டுவது போற்காட்ட... அதை அவருடைய வாய்... அப்படியே உணர்ச்சிப் பெருக்கோடு வெளியே கொப்பளித்துத் தள்ளிவிடுவதைப்போல்...... ஆரம்பிக்கின்றார்...

"இந்த இறந்த வாலிபர்... எங்கள் அலுவலகத்தில் ஒரு சேவகனுக் கடமையாற்றுகின்றார். பெயர் வீரவாகு தமிழ்மீது அசைக்கமுடியாத பற்றுக்கொண்டவர்... இவர் நேற்றைய தினம்... எங்கள் மேலதிகாரியின் அலுவலக அறைக்குள்...அவர் இல்லாத நேரமாகப் பார்த்து அவருடைய மேசையில் 'தமிழ் எங்கள் உயிர்' என்று வெண்கட்டியினால் எழுதிவிட்டார். சில நிமிடங்களின் பின்னர் தமது அலுவலக அறைக்குள் நுழைந்த எங்கள் மேலதிகாரி...தமது மேசையின் மேல் ... எழுதப்பட்டிருந்த அந்த வாசகத்தைப் படித்துக்கொண்டபோது ... ஒரு பெரும் பயங்கர மனிதராகவே மாறிவிட்டார். இத்தனைக்கும் அவரொரு அசல் தமிழர்தான் சேர்...அரசாங்கத்தின் நல்லபிள்ளை சேர்... அப்படியானால் இனிமேலே என்ன நடந்திருக்குமென்று நீங்களே நல்லபடியாக யோசித்துப்பாருங்கள் சேர் அலுவலகத்தில் உள்ள ஒவ்வொருத்தராகக் கூப்பிட்டுக் கூப்பிட்டு —யார் எழுதினது உண்மையைச்சொல்லிவிடுங்கள்...இல்லாவிட்டால் அது நடக்கும் ... இது நடக்கும் என்றெல்லாம் உருட்டினர், மிரட்டினர் எதுக்குமே நாங்கள் தமிழர்கள் என்ற எங்கள் ஒற்றுமையைப் பலமாக்கிக்கொண்டோம். அப்படி ஒருவரும் இல்லையென்றால் நான் இந்தப் பாரதூரமான விடயத்தைமேலிடத்திற்கு இப்பொழுதே அறிவித்து...உங்கள் எல்லோரையுமே வேலையிலிருந்து நீக்கிவிட்டுத்தான் அடுத்த மூச்சு விடுவேனென்று சபதம் எடுத்தார்.

"...அப்பொழுது எங்கள் எல்லோருக்குமே இரத்தம் துடித்தது. எல்லோரும் சேர்ந்து அந்த மேலதிகாரி முகத்தில் காறி உமிழ்ந்துவிட்டு...எங்களுக்கு இந்த வேலைவேண்டாமென்று ஒற்றுமையாக வெளியேறுவோமா என்று நினைத்துக்கொண்டபோதுதான்... வீரவாகு மேலதிகாரியின் முன்னால் போய் அமைதியாக நின்றான்...."மேலதிகாரி அவர்களே...! தமிழ்தாயின் மீது எனக்குள்ள ... அளவு கடந்த ...எல்லையற்ற தாய்ப் பாசத்தினால் நானே இப்படிச்செய்தேன் அதற்குத் தண்டனையாக நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யுங்கோ..." என்று உணர்ச்சி வசப்பட்டவனாகச் சொல்லியேவிட்டான்.

"...நீ... முதலில் இந்த எழுத்தை அழி... பின்னர் என்னுடையகாலிலே விழுந்து நான்செய்தது மகாபிழை ஐயா என்று என்னிடம் மன்னிப்புக்கேள்... இதை நீ செய்யவில்லையென்றால்... உடனே இந்தவிடயம் மேலிடத்துக்குப் போகும்,...அதற்குப் பின்பு என்ன நடக்கும் என்பதை நீ அறிவாய்..." இப்படி அந்த மேலதிகாரி சொன்னதும் ... வீரவாகு உடனே அந்த எழுத்தை அழித்துவிட்டு அவருடைய காலில் விழுந்து நான் செய்தது மகாபிழை ஐயா என்று மன்னிப்புக்கேட்டிருப்பானென்றுதானே... நீங்களும் நினைத்திருப்பீர்கள் சேர்... இல்லை... இல்லவே இல்லை... ஒருக்காலும் இல்லை...

"கனம் மேலதிகாரியவர்களே...என்னுடைய வேலை தான் போனாலும் ... தெருத் தெருவாக நான் நாயாக அலைந்தாலும் என்னுடைய இந்த கையினாலே கடைசி மட்டுமே இந்த எழுத்தை அழிக்கவும் மாட்டேன் மன்னிப்புக்கேட்கவும் மாட்டேன்..." என்று அவன் இப்படித்தான் உறுதியாகவும் இறுதியாகவும் சொல்லி முடித்துக்கொண்டபோது... மேலதிகாரி என்ன செய்வதென்றே தெரியாமல் சில விநாடிகளுக்கு அப்படியே திக்குத் திணறித்தடுமாறிய ஒர்...திடீரென்று அந்த எழுத்தின் மீது காறித்துப்பிவிட்டு தமது சப்பாத்துக் காலை அந்த எழுத்தின் மீது அழுத்தினார்... ஐயோ... தாயே..."என்று வீரவாகு கண்களை இருகைகளாலும் இறுக்கிப் பொத்திக்கொண்டே கடும் உணர்ச்சிவசப்பட்டவனாக உரத்த குரலில் கதறினான்...

கண்களைப்பொத்திய கைகளை அவன் எடுக்க முன்னர்...மேலதிகாரியின் சப்பாத்துக்காலினால் அவனுடைய வயித்திலும் ஒரு பலமான உதை விழுந்தது... அலுவலகத்தின் கண்ணாடிக் கதவோடு அடிபட்டு மோதியபடி சுருண்டு விழுந்த வீரவாகு...மெல்ல எழும்பிய போது அவனுடைய பிடரியிலிருந்து கொதிக்கும் இரத்தம் வடிந்துகொண்டிருப்பதை தெரிந்துகொண்டவன்...கண்ணாடிக் கதவும் உடைந்துபோயிருப்பதையும் பார்த்துக்கொண்டான். அடுத்த நேரம் அந்தச் சூடான இரத்தத்தினால் 'தமிழ் எங்கள் உயிர்' என்று தரையில் அவன் எழுதி முடிப்பதற்குள் மேலதிகாரியின் சப்பாத்துக் கால்கள்... வீரவாகுவை பலமுறை பதம் பார்த்தே விட்டன...

இன்றைக்கு சரியாக 9மணியிருக்கும்... மேலதிகாரியின் அலுவலக வாசலில் குண்டடி பட்டவேங்கையாகவீரவாகு வந்து நின்றான்...அலுவலகலமே ஒரு சுடுகாட்டு அமைதியில் அந்தநேரம் ஆழ்ந்துபோயிருந்தது...

"டேய் தமிழ் எங்கள் உயிர் என்று சொல்லடா... என்று வீரவாகு ... மேலதிகாரியைப் பார்த்து பலமுறை புரியாக உறுமினன்... சற்றுநேரம் என்னசெய்வதென்றே புரியாமல் திக்குமுக்காடிய மேலதிகாரி... திடீரென்று கடும் ஆவேசத்தோடு...தமது சப்பாத்தொன்றைக் கழற்றி அதை வீரவாகுவின் முகத்தில் எறிந்து விடும் நோக்கத்தோடு குனிந்து நிமிர்வதற்கிடையில்...வீரவாகு மறைத்து வைத்திருந்த சுழல் துப்பாக்கியினல்படபடவென்று மேலதிகாரியையும் சுட்டுத் தள்ளிவிட்டுத் தனக்கும் இதே முடிவைத்தேடிக் கொண்டான்..."

இப்படியே அந்தக் கதையை அந்தத் தமிழர் சொல்லி முடித்துக்கொண்டபோது... ஜோன்சனுடைய வெள்ளை முகம் இரத்தமாகச் சிவந்து போயிருந்தது. கைக்குட்டையினல் முகத்தை அழுத்தித்துடைத்தபடிஜோன்சன் பக்கத்தில் பூனையாக நின்றுகொண்டிருந்த தணிகாசலத்தைப் பார்க்கின்றார்... தணிகாசலத்திற்கு அப்போது தம்மையாரும் ... அந்த இடத்திலேயே புடுக்க வைத்துவிட்டு...பெரிய சளகினுல் விசிறித்தள்ளிவிட வேண்டும் போலிருந்தது.

"...உண்மையான தமிழ் மகன் இவன்தான்..." என்று வணக்கத்திற்குரிய முறையில் சொல்லிக்கொண்ட ஜோன்சன்...மிஸ்டர் தணி... என்னருமைக் கனவானே... தமிழன் என்றைக்கும் தமிழனகவே இருக்கவேண்டும் ருஷியன் என்றைக்கும் ருஷியனகவே இருக்கவேண்டும். அமெரிக்கன் என்றைக்கும் அமெரிக்கனகவே இருக்க வேண்டும்..." என்றெல்லாம் அமைதியாகவும் ஆழமாகவும் சொல்லிமுடித்தபோது தணிகாசலம்...ஒரு அதிபிரகாசமான ஒளியைக் கண் திறந்துபார்க்கக் கூசியவராக...சும்மா சாட்டிற்குக் கண்களை மூடித்திறக்கின்றார்.

(சம்பவங்கள், பெயர்கள் கற்பனை)

---

## அரசியல் மடல் 3-ம் பக்கத் தொடர்

தமிழ் எங்கே? தமிழின் நிலை
என்னவெனத் தாமறியாத்
தமிழர் என்பார்

தமிழர் நலம் காப்பவராய்
அரசியலின் சார்பாக
வரமுயன்றால்—

இமைப்போதும் தாழ்க்காமல்
எவ்வகையும் கிளர்ந்தெழுதல்
வேண்டும்!

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னதை 1970 பொதுத்தேர்தலின்போது தமிழினம் மறந்துவிட்டதால் வந்த விளையைத்தான் இன்று அனுபவிக்கிறது.

நண்பா, 26 திங்களாக எதிர்பார்த்திருந்த காங்கேசன்துறை இடைத்தேர்தல் எதிர்வரும் சனவரியில் வரவிருக்கிறதாம்! தமிழ்ப் பகைவர்களுக்கும் புதிய அரசியல் திட்டத்தை கொண்டுவந்து நம்மைத் தாழ்த்தியவர்களுக்கும் வாக்குச் சீட்டினல் பலமான மரண அடி கொடுத்திட அருமையான வாய்ப்பு நம்மை நோக்கி விரைந்துவருகிறது. அது பற்றி பின்னர் எழுதுவேன்! ஆனல் மேற்சொன்ன பாரதிதாசனின் பாடலை மட்டும் தமிழர் உள்ளமெல்லாம்—தமிழர் இல்லமெல்லாம் பரப்பிவிடு!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# தேசிய அரசப் பேரவையில். தமிழர் கூட்டணி

# பா. உ.க்களின் சொல்லம்புகள்!

தங்கத்துரை:- நல்லூர் பிரதிநிதி அவர்களுக்கு பேசும்போது எதைப்பேச வேண்டும் என்று தெரியாது. ஏதோ பேசவேண்டும் என்பதற்காக பேசுகின்ற சிலரில் முதன்மையானவர் அவர்!

●

தங்கத்துரை:- யாழ் விவசாயிகளுக்கு விதை உருளைக் கிழங்கு வழங்குவதை குறைத்துவிட்டீர்கள்!

என். எம்:- தற்காலிக தட்டுப்பாடு காரணமாக!

கலாசார அமைச்சர் எஸ். எஸ். குலதிலக:- நான் அவர்களுக்கு அதிகமாக கொடுத்திருக்கிறேன்!

துரைரத்தினம்:- அதிகமாகக்கொடுத்திருக்கிறீர்களா? தமிழ் பண்பாட்டுத் துறைக்கு ஒரு உதவியாளரையோ அல்லது ஒரு லிகிதரையோ கூட நீர் நியமிக்கவில்லையே!

●

தர்மலிங்கம்-: பிரதமரின் யாழ் வருகையை ஒட்டி நெல்லியடி கூட்டுறவுச் சங்கம் 27,000ரூபாவைபாழாக்கியிருக்கிறது!

இலங்கரத்தின:- எந்தக் கூட்டுறவுச் சங்கம்?

தர்மலிங்கம்:- அதுநெல்லியடி, அல்லது கரவெட்டி கூட்டுறவுச் சங்கம்!

லக்ஸ்மன் ஜெயக்கொடி:- எதற்காக?

தர்மலிங்கம்:- சிகரத்துக்கும் அலங்காரங்களுக்கும்!

இலங்கரத்தின:- அந்த கூட்டுறவுச் சங்கத்தின் பெயரை சொல்லமுடியுமா?

தர்மலிங்கம்:- சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் இராசசிங்கம் தலைவராகவுள்ள கரவெட்டி கூட்டுறவுச் சங்கம்!!

●

திரு. தர்மலிங்கம்:- "தமிழர் பிரச்சினைகள் பற்றி எங்கள் தலைவர் தந்தை செல்வநாயகத்தை அழைத்து அவருடன் பேசுங்கள்!

திருமதி விவியன் குணவர்த்தன:- செல்வநாயகத்துக்கு காதுகேட்காது!

தர்மலிங்கம்:- ஆம், திரு. செல்வநாயகத்துக்கு கேட்க வேண்டிய அளவுக்கு காது கேளாது என்பது உண்மை தான்! ஆனல் நீதியமைச்சருக்கு காதிருந்தும் கேட்க மறுக்கிறதே!

●

திரு. இரத்தினம்:- நீங்கள் நியமித்த தமிழ் அமைச்சரை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளுகிறர்களா என்பதை அறிய அவரை மன்னர் இடைத்தேர்தலில் நீங்கள் நிறுத்தியிருக்கலாம். தவறிவிட்டீர்கள்! காங்கேசன்துறை இடைத்தேர்தல் வருகிறது! அதிலாவது அவரைப்போட்டியிட செய்யுங்கள்."

## ஈழவேந்தனின் 'பாவைத் தமிழ்' வெளியீடு

எதிர்வரும் 19-12-74-ல் சரசுவதி மண்டபத்தில் சைவ ஊழியர் கழகப் பேரவை நடாத்தும் கந்தபுராண சிறப்பு விழாவில் ஈழவேந்தன் எழுதிய "பாவைத் தமிழ்" எனும் நூல் வெளியிடப்படும். நூலை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வெளியிட்டு ஆய்வுரை நிகழ்த்துவார் முதற்பிரதியை கட்டடக்கலைஞர் திரு. வி. துரைராசா அவர்கள் பெறுவார்.

இந்நூலுக்கு சுதந்திரன் ஆசிரியர் அளித்துள்ள அணிந்துரையில், "தித்திக்கும் திருவாசகத் தேனைப் பிழிந்தெடுத்து திரு. ஈழவேந்தன் இந்நூலில் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ளார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தியாகராசாவும் அங்கொடையும்!

"வட்டுக்கோட்டை பிரதிநிதியவர்கள், காங்கேசன்துறை இடைத்தேர்தலைப் பற்றியும் குறிப்பிட்டார். தாங்கள் காங்கேசன்துறை இடைத் தேர்தலைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அங்கொடையிலிருக்கிறவர்கள் கூட காங்கேசன்துறையிலே திரு. செல்வநாயகம் அவர்களை தோற்கடிக்கலாமென்று எண்ணமாட்டார்கள்.

தர்மர்:- அங்கே இருக்க எண்ணுபவர்கள் அப்படித்தானே சொல்லியிருப்பார்கள்!

இரத்தினம்:- தேர்தல் முடிந்தவுடன் அவர் அங்கே போய்விடுவாரோ என்றுதான் நான் துன்பமடைகிறேன்!!


இப்பொழுது காட்சியளிக்கிறது

ரீகல் -


வெலிங்டன் (யாழ்நகர்)

முத்துராமன்

ஜெயந்தி,

சிவகுமார்,

சோ நடித்த,



சண்முகப்பிரியா

8-வது வாரம்

கெப்பிட்டல்

சிவாஜி, லட்சுமி, விஜயகுமாரி, எஸ். வரலட்சுமி, முத்துராமன், சிவகுமார் நடித்த-

ராஜ ராஜ சோழன்

தென்னகத்திலேயே முதன்முதலாக தயாரித்த "சினிமாஸ்கோப்" தமிழ் வண்ணச் சித்திரம்.

கிங்ஸ்லி 9-வது வாரம்!

விஷ்ணுவர்தன, சந்திரகலா நடித்த-

ஸ்ரீதரின் அலைகள்

ரீகல் — மட்டுநகர்

தமிழனின் பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் விளக்கும் முதன் முதல் தயாரிக்கப்பட்ட வண்ண —சினிமாஸ்கோப் தீந்தமிழ் திரையோவியம்

சிவாஜி, விஜயகுமாரி, நம்பியார், — நடித்த

ராஜ ராஜ சோழன் (கலர்)

பாடும் மீனுறையும் நகராம் மட்டு நகரின் மக்களே இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவவிட விடாதீர்கள் சந்தியுங்கள் ராஜ ராஜ சோழன்.

16 திங்கள் முதல்! கெப்பிட்டல் திரையில்

எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, சௌகார் ஜானகி, அசோகன்- நாகேஷ் நடித்த-


அல்லி

காட்சியளிக்கிறது! செல்லமகால் திரையில்

முத்துராமன், சுந்தரராஜன்

சோ,

ராகவன், சிவகுமார்



ஜெய்ந்தி,

லட்சுமி - மனேரமா,

சுகுமாரி நடித்த-

இறைவன் எங்கே இருக்கிறன். எப்படிச் சந்திக்கலாம் என்றலைபவர்களுக்கு ஓர் சிறந்த படம் ஷண்முகப்பிரியா.

ஷண்முகப்பிரியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகாமாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் டிசம்பர் மாதம் 15-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.